
பதிவு எண் 2041 | மகாத்மா காந்தி வாழ்க. | தனிப்பிரதி விலை அணா ஒன்று





| | ரூ. அ. |
|---|---|
| வருட சந்தா ... ... ... | 3—0 |
| 6 மாத சந்தா... ... ... | 1—12 |

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. ராமசாமி நாயக்கர்.

| | ரூ. அ. |
|---|---|
| நாட்டிற்கு சந்தா ... | 4—0 |
| ரம் அங்குலம் 1-க்கு ... | 0—8 |

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-ஞு புரட்டாசி-மீ 3-உ (19—9—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 21.



## உண்மையான கதர்

கேட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடுகாங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன்,

காங்கிரஸ் கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,

ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

## கதர்! கதர்!! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்

அத்தாக்ஷி பத்திரம் பெற்ற

### சுத்த கதர் ஜவுளிகள்

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், அச்சு துண்டுகள், பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,
A. முருகேச முதலி.
No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

## காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்த கதர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.

ஊத்துக்குளி S. I. Ry.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916-ஞு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சிர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேற்சியடைய மூன்று மாதம் ஆகும். தேற்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்ட்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

## திருப்பூர் சுத்த க்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத் தரியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை

தமிழ்நாடு க்த்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

# C. N. முருகைய பண்டிதர் மருந்துகள்.

## (36-வருஷத்திய அனுபவம்)

திருவள்ளுவர் ஞானவெட்டிப் பிரகாரம் குருமுப்பூவினல் முடிந்தவைகளும் 6 தலைமுறையாய் நாங்கள் கையாண்டு வருகிற சண்ட மாருதக் குளம்பு தாளக பஸ்பம் சொர்ணத்ருதி அயக்காந்த சத்துச் செந்தூரம் நாகபஸ்பம் முதலிய சிறந்த அவுஷதங்கள். ஆங்கில டாக்டர்கள் பலர் ஆப்ரேஷன் இல்லாது தீராது என்று கைவிட்ட வியாதியஸ்தர் பலரை 3 வேளை மருந்தினல் குணப்படுத்தி கவுரவ சர்ட்டிபிகேட்டுகளும் சங்கிலி மேடல் முதலான பெற்றிருக்கிறோம்.

### க்ஷயத்திற்கு

(1) தாளக பஸ்பம் (2) கபகஸ்தூரி எண்ணை (3) சொர்ணரத்ருதி அயக்காந்த சத்துச் செந்தூரம் (4) சிவப்பிரசாத லேகியம். நெடுங்காலமாய் அவஸ்தைப்படும் க்ஷயம் என்னும் கொள்ளை நோயையும் ஆயுளுள்ளளவும் இம்சிக்கும் (Ashthma) என்னும் சுவாசகாசம், மந்தாரகாசம், ஈளை, இருமல், சகிக்க முடியாத இளைப்பு இதுகளை எமது தாளக பஸ்பத்தையும் கஸ்தூரி எண்ணையையும் சேர்த்து அமாவாசை பிரதிமையன்று உபயோகித்து அதன்பின் 12-நாள் சொர்ண ரத்ருதி அயக்காந்த சத்து செந்தூரமும் சிவப்பிரகாச லேகியத்தையும் உபயோகிக்கவும். பின், பௌர்ணமி பிரதிமையன்று மேற்படி பஸ்பத்தையும் கஸ்தூரி எண்ணையும் சாப்பிட்டு அதன்பின் 12-நாள் செந்தூரமும் லேகியமும் சாப்பிட்டு மறு அமாவாசை பிரதமையில் பஸ்பமும் கஸ்தூரி எண்ணையும் சாப்பிட்டு பின் 12 நாள் செந்தூரமும் லேகியமும் சாப்பிட்டு விட்டால் பூர்ணசுகமாய் விடும். என் அனுபவத்தில் 1000 கணக்கான வியாதிகளைத்தீர்த்து இருக்கிறேன். குணமாகாவிடில் பணம் வாபீஸ் செய்கிறோம்.

மூன்று வேளையில் சகிக்கமுடியாத இளைப்பு இருமல் இதுகளை மட்டும் சாந்தி செய்யக்கூடிய மருந்து விலை ரூ. 6.

36-நாள் பூர்ண குணமுண்டாக்க ரூபா 75—0—0 (12-நாள் மருந்து தடவை 1-க்கு அனுப்பப்படும்) 12-நாள் மருந்து ரூ. 25—0—0 மூன்று முறைக்கு 36 நாளுக்கு ரூபாய் 75—0—0

### மேகசூலைக்கும், மூலத்திற்கும்.

குருமுப்புவினல் முடிந்தது மேகாருதி வடகம். அசனவில்வாதி தைலம்.

மேகசூலை, ஜுரசூலை, பக்கசூலை, கால்கை முளிகளில் வீக்கம், கைகால் முடக்கு, கைகால்களில் மோதுகட்டி 10. 15வரு நடக்க முடியாமலிருக்கும் சூலைக்கு 15-வேளை மருந்தில் சுகமுண்டாகி நன்றாய் நடக்கலாம். இதல்லாமல் ரத்தமூலம், குத்தல், உள்மூலம், அபானத்தில் முளை போலிருக்கும் புறமூலம், மலத்திற்கு முன் பின் ரத்தம்வரும் சீழ்மூலம் முதலிய நவமூலங்களைக் கண்டிக்கும். ஆப்ரேஷன் தேவையில்லை.

15-வேளை மருந்திற்குப் ஒன்றுவிட்டொரு நாள் ஸ்நான தைலத்திற்கு ரூபாய் 15—0—0

### ஸ்ரீ நமசிவாயகுரு சந்தானகறணி எண்ணை. (1)

### பெரிய எண்ணை. (2)

ஸ்திரீகளுக்கு:— பலவகை வெள்ளை ரோகங்கள், மலட்டு ரோகம் மாதவிடாய் காலத்தில் பொறுக்க முடியாத வயிற்றுவலி, மாதவிடாய் அளவுக்கு குறைந்தும் அல்லது அதிகப்பட்டும் போதல் வயற்றில் கட்டி மாதம் பலமுறை மாதவிடாய் காணுதல் அல்லது பல மாதங்கள் ஆகாதிருத்தல் சிறுமிகள் பருவமாகாது பல ஆண்டுகள் வரை நின்றுவிடல் இவைகளும் கர்ப்பப்பையின் அறுவகை ரோகங்களும் 3-நாள் மருந்தில் நீங்கி மூன்று மாதத்தில் கர்ப்பம் உண்டாகும்.

(2) ஆண்களுக்கு:— அதிக போகத்தினல் உண்டாகும் நீர் கடுப்பு வெள்ளை, மஞ்சள் வெள்ளை, ரணம், கிரந்தி, சரீராதியந்தம் குத்தல் வலி, இன்னும் ரோகஸ்திரீகளினலுண்டாகும் பல வியாதிகளும் மூன்று நாள் மருந்தில் பூர்ண சுகமுண்டாகும்.

3 அவுன்ஸ் எண்ணை ரூ. 7. 1 சேர் அமிர்த சஞ்சீவி லேகியம் ரூ 15.

### மேக ராஜாங்க மதன விந்தாதி லேகியம்.

இது 20 வகை மேகத்தையும், 8 வகை குன்மம், 21 வகை வாய்வு 40 வகை பித்தம், ஸ்திரீகளுக்குள்ள ஆறுவகை கர்ப்பநோய்களை தீர்த்து நல்ல பசி தீபனத்தைக்கொடுத்து ஜீவாதார நரம்புகளை முறுக்கேற்றி, தாது விர்த்தியையும் ஆண்மையையும் உண்டாக்கும்.

48 நாள் லேகியம் 1 சேர் ரூ 5. 24 நாள் லேகியம் ரூ. 2—8,
12 நாள் லேகியம் ரூ. 1—4.

### நீரழிவுக்கும், தாது புஷ்டிக்கும் அமிர்த சஞ்சீவி லேகியம்.

வங்கபஸ்பம். தங்கபஸ்பம் 108புடமான அப்ரேக செந்தூரம். பவளபஸ்பம். நீரழிவு, அந்தராதாகம், மலசிக்கல். அல்லை, நீர்ப்பாண்டு சரீரத்தை வரட்சியாக்கக் கூடிய அஸ்திமேகம், நீரிலுள்ள சர்க்கரைச் சத்தைக் குறைத்து தேக வெளுப்பை மாற்றும் தாது புஷ்டிக்கு இதற்கு நிகரான மருந்து ஒன்றுமே இல்லை. பால்ய பருவமடைய விரும்பும் விருத்தர்களுக்கு அருமையான மருந்து. கிழத்தனத்தை நீக்கி வல்லமை படையச்செய்வதில் இதற்கு நிகரானது உலகில் கிடையாது. உலக சுகத்தை இஷ்டம்போல் அனுபவிக்கலாம். மருந்தின் பெயரைப் பாருங்கள். சாஸ்திர ரீதியாய் முறை தவறாமல்செய்தது. பாலர், பெண்கள் யாவரும் சாப்பிடலாம்.

48 நாள் சாப்பிடககூடிய லேகியம் ரூ. 15—0—0

| | | | |
|---|---|---|---|
| 12 நாள் அப்ரேக் செந்தூரம் | ரூ. 6 | 4 | 4 |
| 12 நாள் வங்கபஸ்பம் | ரூ. 8 | 0 | 0 |
| தங்க பஸ்பம் 12 நாள் | ரூ. 6 | 4 | 0 |
| பவள பஸ்பம் 12 நாள் | ரூ. 1 | 8 | 0 |

ஆக மொத்தம் ரூபாய் 17—0—0

### சர்வ மேகங்களுக்கும் மகா ராஜாங்க சுகந்த பரிமளாதி ஸ்நானத்தைலம்.

ஆண், பெண் குழந்தைகள் வாரம் இருமுறை ஸ்நானம் செய்துவர 20 வகை மேகத்தையும், நீரழிவு, நீர் எரிச்சல், கண் எரிச்சல், கண் புகைச்சல், கைகால் எரிவு, கிரந்தி, சத்தாமைநாற்றம், அஸ்திஜுரம், வெட்டை, மயக்கம், தலை பொடுகினல் மயிர் உதிர்தல் இதுகளை நீக்கி கூந்தலை வளரச்செய்யும். 24 அவுன்ஸ் புட்டி ரூ. 5—0—0,
12 அவுன்சு ரூ. 2—8—0, 6 அவுன்சு 1—4—0

### ராமபாணக் குளிகை.

ஆண்களுக்கு:—நீரடைப்பு கல்லடைப்பு, மலஜலக்கட்டினல் பிராணவஸ்தைப்படும் சமயமும் வயற்றில் நரம்பு பிடித்து நிமிரமுடியாதிருத்தல், அண்டவாயு விரை வீக்கம் விரைகுத்தல் வலி இவைகளின் வாதையால் தற்கொலை செய்யத் துணியும் வியாதியஸ்தருக்கு ஓர் குளிகை சுகப்படுத்தும்.

பெண்களுக்கு:—கர்ப காலத்தில் மலஜல மிறங்காது துன்பம் இடுப்புவலி கணுக்களில் வலி, 5, 7, 9வது மாதங்களில் அனுபானப்படி ஒரு குளிகை சாப்பிட்டுவர கர்பப்பை ரோகங்களை நீக்கி சிசுவுக்கு ஆரோக்கியத்தைக் கொடுத்து சுகப் பிரசவம் ஆகும். 5 குளிகை ரூ 2—8—0

### குரு ஜுரஹாரி மாத்திரை.

மலேரியா என்னும் குளிர் ஜுரத்தை ஆயுள் பூராவும் வராமல் தீர்க்கும் மூன்றும் முறை ஜுரம், நாலா முறை ஜுரம் இதுகளை வேருடன் நீக்கும். குணமாகாதவரை பணம் திருப்பி அனுப்பிவிடுகிறோம்.

6 வேளை மாத்திரையும் 9 வேளை கஷாய மருந்தும் சேர்ந்து ரூ. 5—0—0

### (Dentone) டென்ட்டோன் என்னும் பல்பொடி.

சிறந்த வைத்திய முறையில் தயாரிக்கப்பட்டது. பற்களில் உண்டா விஷ நீர், இரத்தம் விழுதல் சீழ் வடிதல், சொத்தை வலி, ஈர்களில் ஏற்படும் புண் இவைகளை உடனே சுகப்படுத்தும். டப்பி 1க்கு 0—2—6, டஜன் 1 க்கு ரூ 1—8—0. குரோஸ் 1 க்கு ரூ. 18—0—0.

மேல் கண்ட அவுஷதங்கள் ஆறு தலைமுறையாயும் என் 36 வருஷ அனுபவத்தில் நடந்தேறி வருகிறது ஆகையால் இதைப்பற்றி அதிகம் விமரிசையாய் கூறவில்லை. இந்த அவுஷதங்களால் குணமில்லையென்று நிரூபிக்கிறவர்களுக்கு பணம் வாபீசு செய்கிறோம். உபயோகிக்கும் முறையும் அனுபானமும் மருந்துடன் வரும் இன்னும் விபரங்கள் அறிந்துகொள்ள விரும்புகிறவர்கள் 1 அணு தபால் அனுப்பவும், வியாதியஸ்தரிடமிருந்துவரும் கடிதங்கள் ரகசியமாய் வைக்கப்படும்.

### நற்சாக்ஷியைக் கவனியுங்கள்.

மகா-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் சி. எஸ் ரத்னசபாபதி முதலியார் அவர்கள் முனிசிபல் சேர்மன் டிஸ்டிரிக்டு போர்டு பிரசிடெண்ட் கோயமுத்தூர்.

" ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் பி. ஏ. பி. எல், வக்கீல் எம். எல். ஏ. கோயமுத்தூர்.

ஸ்ரீ நமச்சிவாயகுரு தமிழ்சித்த ஆயுள்வேத வைத்தியசாலை, 14-106 பெரிய கடைவீதி, கோயமுத்தூர்.

## வடஆற்காடு ஜில்லா ஓட்டர்களுக்கு ஆரணி ஸ்ரீமான் ஏ. என். பரசுராம நாயக்கரின் விக்ஞாபனம்.

### சட்டசபைத்தேர்தல்.

வரும் நவம்பர்-மீ 8உ யன்று நடைபெறவிருக்கும் சென்னை சட்டசபைத் தேர்தலுக்கு, நான் ஒருஅபேக்ஷகனாய் நிற்கிறேன். வடாற்காடு ஜில்லாவுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் மூன்று பிரதிநிதி ஸ்தானங்களில் ஒன்றுக்கு, என்னை, உங்கள் பிரதிநிதியாய்த் தேர்ந்தெடுக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.

### என் கொள்கையும் வேலையும்.

நான் ஒரு தீவிர காங்கிரஸ்வாதி; என்பதைச்சென்ற 10 வருடமாக நான் செய்கையில் காட்டி வந்திருக்கிறேன். இந்த ஜில்லாவில் காங்கிரஸ் இயக்கத்தை நிலை நாட்டுவதற்கு முன்னணியில் நின்ற வெகு சிலரில் நானும் ஒருவன். இம்மாதிரி தேசத்தொண்டில் இடைவிடாது ஈடுபட்டு வந்திருப்பதால், பலவித தியாகங்களுக்கும் கஷ்டங்களுக்கும் ஆளானேன் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. மகாத்மாவின் ஒத்துழையாயியக்கத்தை 1920ஆம் காங்ரஸ் மகாசபை ஏற்றுக் கொண்டபோது, தேசத்தில் பல்வேறு அபிப்பிராய பேதமும் குழப்பமும் ஏற்பட்டிருந்த சமயத்தில் நான் காங்கிரஸ் ஆணையைத் தாங்கிநின்று, சர்க்காரால் எனக்கு வழங்கப்பட்டிருந்த கௌரவ ஸ்தானங்களைத் துறந்தேன். என் குமாரர்கள் அரசாங்க உதவிபெற்ற பள்ளிக்கூடத்திற்குப்போவதை நிறுத்தி, ஆரணி தேசீயப் பாடசாலைக்கு அனுப்பி வந்தேன். சட்டசபைபகிஷ்கார இயக்கத்தையும் என் பூரண சக்தியோடு ஆதரித்தேன். அப்பொழுது ஜில்லா காங்கிரஸ் கமிட்டியார் என்னை சட்டசபைக்கு ஒரு அபேக்ஷகனாய் நிறுத்திவைத்திருந்ததை முன்னிட்டு, சுமார் 1500 ரூபாய் வரையில் செலவிட்டுத்தேர்தல் பிரசாரம் நடத்தியிருந்தும், காங்கிரஸ் சட்டசபை பகிஷ்காரத்தை அநுசரித்து நான் விலகிக்கொண்டேன் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். பிறகு நிலைமை மாறிப்போய் விட்டது; மகாத்மா காந்தியின் தெய்வீக ஒத்துழையாயியக்கம் நிறுத்தப்பட்டுப் போயிற்று. என்றாலும் சென்ற சட்டசபைத் தேர்தலில் சுயராஜ்யக்கட்சி அபேக்ஷகர்களுக்கு ஆதரவு தேடினேன். சமீபத்தில் நடைபெற்ற உபதேர்தலில் சுயராஜ்யக் கட்சியின் வெற்றியில் எனக்கும் ஒரு பங்குண்டு. இவ்வருடத் தேர்தலுக்கு சுயராஜ்யக் கட்சியின் ஆதரவின்கீழ் நான் நிற்காவிட்டாலும், நான் தேர்ந்தெடுக்கப்பட்டால், சட்ட சபையில் குடிகளின் நன்மையைப் பெருக்குவதற்கு எப்பொழுதும் திடவீரனாகவும் அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு நான் ஒரு பலத்த எதிரியாகவும் நடந்து கொள்வேன் என்று உறுதி கூறுகிறேன்.

### நான் நிற்கக் காரணம்.

ஆனால் தற்பொழுது ஆதிக்கம் செலுத்திவரும் சுயராஜ்யக்கட்சியின்சார்பில் ஏன்நிற்கவில்லை என்பதற்கு நான் பதில் சொல்லுகிறேன். பொதுவாகப்பேசுமிடத்து,சுயராஜ்ய தாகம் எனக்கும் அதிகமாகவேயிருந்து வருகிறது. ஆனால் மாகாண சட்ட சபையில் முட்டுக்கட்டை போடுவதென்ற அவர்கள் சித்தாந்தம் ஏற்றதாயில்லை. இப்படிச் செய்வது வீண் அரசியல் காலக்ஷேபம் என்பதை சென்ற மூன்றுவருட அநுபவம் விளக்கிக் காட்டிவிட்டது. எனவே தேசிய வாதிகள் மகாத்மா காந்தியவர்களால் வகுக்கப்பட்டிருக்கும் தேசிய நிருமாண திட்டத்திற்கும் அனுகூலமாயிருக்க வேண்டுமென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். ஆகையால் இந்த அபிப்பிராய பேதத்தின் காரணமாக நான் அக்கட்சியில்சேர்ந்து நிற்கமுடியாமல் தனியாய் நிற்கிறேன்.

### பிராமணர் பிராமணரல்லாதார் சண்டை வேண்டாம்.

சென்னையில் சுயராஜ்யக் கட்சியார் ஜஸ்டிஸ் கட்சியாருடன் உத்தியோக சம்பந்தமாயும் பிரதிநிதி ஸ்தானங்கள் விஷயமாயும் தியாக புத்தியுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தால், கவர்ன்மெண்டை எதிர்ப்பதற்கும் காங்கிரஸ் போராட்டத்திற்கும் மகத்தான ஆதரவு தோன்றி யிருக்கும். ஆனால் இந்த முக்கியமான அம்சத்தை சுயராஜ்யக் கட்சியார் அனுஷ்டிக்க மறுக்கிறார்கள். சட்டசபையில் பூரணமாய் கவர்ன்மெண்டை எதிர்க்க விரும்பும் அவர்கள் பிராமணரல்லாதாரின் பீதிகளையும் சந்தேகங்களையும் நிவர்த்தி செய்ய முன்வரவில்லை. எனினும் இது நாளுக்குநாள் பலப்பட்டுக்கட்சித் துவேஷத்திற்கும் ஜாதிப்பகைமைக்கும் அழைத்துச் செல்லுகிறதால் நாட்டில் கிராம பஞ்சாயத்துமுதல் சட்டசபை வரையில் எல்லாத் தேர்தல்களிலும் "பிராமணன் பிராமணரல்லாதவன்" என்ற விகாரமான தொனியின் எதிரொலியே கேட்கப்படுகிறது. நம் மாகாண சுயராஜ்யக் கட்சித் தலைவர்களான பிராமணர்கள் "அன்னியர் ஆள்வதைவிட பிராமண ரல்லாதாரே ஆளட்டும், காலக்கிரமத்தில் தேசாபிமானத்தால் பிராமண ரல்லாத தலைவர்கள் பிராமணர்களுக்குத் தக்க அந்தஸ்தைக் கொடுப்பார்கள்" என்று நம் பக—தியாக புத்தியுடன் இதுவரையில் சொல்ல முன்வரவில்லை. எனவே ஜஸ்டிஸ் கட்சியார் வகித்துவரும் ஸ்தானங்களை எல்லாம் சுயராஜ்யக் கட்சி அங்கத்தினர்கள் கைப்பற்ற முயற்சிக்கும்பொழுது பிராமணரல்லாதாரின் பீதி அதிகப்பட்டுப் போயிற்று. அரசியல் பிராமணரிடத்தில் கொண்ட இந்தப் பீதி பொதுவாக பிராமண வகுப்பையே துவேஷிக்கும் விஷமாக மாறிவிட்டது. எனவே ஒரு சிறிய வகுப்புப் பிணக்கு பெரிய சமூகச் சச்சரவாக மாறியதோடு அன்னிய ஆட்சிக்கு இந்தச் சண்டையால் பலத்த ஆதரவு கிடைத்துவிட்டது; சட்ட சபைகளும் ஸ்தலஸ்தாபனங்களும் ஜாதிச் சண்டையின் மேடைகளாக மாறிவிட்டனவேயன்றி, குடிகளுக்கு நன்மை செய்வதிலும் அரசாங்கத்தின் அதிகாரங்களை ஜனப் பிரதிநிதிகள் கைப்பற்றிக் கொள்வதிலும் சிரத்தை கொள்ளாத நிலைமையிலிருக்கின்றன. ஆகையால் இந்த நிலைமையைப் போக்கி, இந்த இருகட்சிகளும் ஐக்கியமாய் கவர்ன்மெண்டை எதிர்த்து ஜன நன்மைக்கு உழைக்கவேண்டும் என்பதை வற்புறுத்துவதற்கு அறிகுறியாகவே நான் ஒரு அபேக்ஷகனாய் நிற்கிறேன். ஓட்டர்கள் என்னை ஆதரிப்பதன் மூலம் கட்சி அல்லது ஜாதிச் சண்டைகள் ஒழியும்.

### மூடுமந்திரம் வேண்டாம்.

கவர்ன்மெண்டை சுயராஜ்யக் கட்சியார் திறமையாக எதிர்க்க விரும்பினால் பிராமண பிராமணரல்லாதர் பிணக்கை முதலில் சமரஸமாய்த் தீர்த்துக்கொள்ள வேண்டும். இந்தப் பிணக்கு இருக்கிற வரையில் கவர்ன்மெண்டை எதிர்க்க முடியாது. "கவர்ன்மெண்டை எதிர்க்கிறோம். எங்களுக்கு ஆதரவளியுங்கள். ஜஸ்டிஸ் கட்சியை ஒழித்துப் போடுங்கள்" என்று பேசுவதில் பயனில்லை; முன்னால் ஏற்பட்ட சென்னை பிராமணரல்லாதார் சங்கம், தேசிய வாதிகள் தீர்மானம் இவைகளைப் புறக்கணித்ததன் பயனால் தான் காங்கிரஸ் வாதிகளான பிராமணரல்லாதார் பிராமணத் தலைவர்களை இப்பொழுது சந்தேகிக்கின்றனர். கிராமங்களில் எம்மாதிரியான அபிப்பிராயம் இருக்கிறதென்பதை அறியாமல், அக்கட்சியை யடக்க முயற்சிப்பது வீண்வேலையாகும். ஜஸ்டிஸ் அல்லது பிராமணரல்லாதார் பீதியை சுயராஜ்யக் கட்சியை நடத்தும் பிராமணத் தலைவர்கள் நீக்கும் நாள் எந்நாளோ அந்நாள்தான் தேசிய மனப்பான்மை உதயமாகும். நேற்றைய வரையில் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களாயும் பிரசாரகர்களாயும் விளங்கியவர்களை சுயராஜ்யக் கட்சியார் தங்கள் கட்சியில் சேர்த்துக் கொண்டு தேர்தல் பிரசாரஞ்செய்து கட்சி வெற்றியைப் பெற முயற்சிப்பதைவிட என்றைக்கோ அடங்கிப் போயிருக்க வேண்டிய ஜஸ்டிஸ் கட்சிக்கு தீர்க்காயுள் கொடுத்து வரும் பிராமண பிராமணரல்லாதார் பிணக்கை ஒழிக்க முயற்சி செய்வதுதான் தேசாபிமானமாகும். இந்த ஜாதிக்காய்ச்சல் நமது நாட்டுக்கே பெரும்பிணியாகி இருபாலரையும் பிரித்து அவர்களுக்குள் மனஸ்தாபத்தை ஏற்படுத்துகிறபடியால் இதை உடனே போக்கவேண்டுமென்று விவேகிகளான வடஆற்காடு ஜில்லா, ஓட்டர்கள் தெரிவிப்பதற்காகவும் சுயராஜியக் கட்சியாரும் ஜஸ்டிஸ் கட்சியாரும் பொதுஜன வாக்கை மதிக்கும்படி செய்யவும் என்னைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன். போனதுபோக, இனியாவது பிராமணரும் பிராமணரல்லாதாரும் கிராமமுதல் பெரியநகரம் வரையில் ஒன்றுபட்டுழைத்து, காங்கிரஸ் மகாசபையில் அசையாத் தூண்களாக விளங்கும்படி செய்ய வேண்டுமென்பது என் அபிப்பிராயம். இந்த எண்ணம் பல ஆயிரக்கணக்கான ஓட்டர்களிடத்தில் குடிகொண்டிருக்கும் உண்மையை உணர்ந்தே நான் தைரியமாய் தனி ஹோதாவில் சட்ட சபைக்கு ஒரு அபேக்ஷகனாய் நிற்கிறேன்.

### சட்டசபையில் என்வேலை.

நான் சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால், முதன்மையாக ஜாதிமத வித்யாசங்களில்லாமல் பிராமணர்

முதல் ஆதித் திராவிடர் வரையில் எல்லாரும் ஒன்றுபட்டு ஜன நன்மைக்கு உழைக்கக் கூடிய ஒரு தேசீய ஒப்பந்தத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியத்தை மற்ற அங்கத்தினர்களுக்கு அடிக்கடி வற்புறுத்துவேன். மாகாண சட்ட சபைகளின் மூலமாய் என்றும் சுயராஜ்யம் வரப்போவதில்லை. ஆனால் ஜனங்களின் தினசரி வாழ்க்கையின் கஷ்டங்களையும் கொடுமைகளையும் நிவர்த்தி செய்து அனுகூலஞ் செய்யச் சட்டசபையில் பாடுபடமுடியும். உதாரணமாக விவசாயிகள் வியாபாரிகள் கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள், உபாத்தியாயர்கள் முதலியவர்களின் கஷ்டங்களை நான் நன்கறிவேன். இவர்களுக்கும் எனக்கும் அநேகவருடகாலமாய் நெருங்கிய பழக்கம் இருந்து வருகிறது. ஆகையால் இந்தக் கஷ்டங்களைப்பற்றி சுமாரியாய் சட்டசபையில் கேள்விகள் கேட்டும், தீர்மானங்கள் கொண்டுவந்தும், பரிகாரந் தேடுவேன். வருமான வரியின் கொடுமையைத் தளர்த்தவும், சாஸ்வத நிலவரியை ஏற்படுத்தி செட்டில்மெண்டுகளின் கொள்ளையை நிறுத்தவும், ஐக்கிய நாணயச்சங்கம், காட்டு இலாகா, இவைகளின் அமைப்பை விசாரித்து இவைகளின் அநுகூலத்தைப் பெருக்கவும், பொதுவாக போக்குவரவு சாதனங்கள் அதிகப்படவேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தி ஜனங்களுக்கு நன்மை ஏற்படும்படி செய்யவும் உழைப்பேன். மகாத்மாவின் கைராட்டினத்திற்கு ஆதரவு தேடவும், ஜீவனோபாயமற்று வெளி நாடுகளுக்குக் குடியேறிய ஏழை ஜனங்கள் கஷ்டப்படுவதைக் குறைக்கவும், நான் தயாராயிருக்கிறேன். சட்ட சபையில் ஸ்தானம் பெறும் கட்சிகளின் தாரதரங்களைக் கவனிக்காமல், ஜன நன்மைக்கான எந்தத் தீர்மானத்தையும் ஆதரித்து, வகுப்புக் காய்ச்சலை யடக்க முயற்சி செய்வேன். நான் ஜனங்களின் மனிதன்; டாம்பீக மில்லாதவன்; ஆகையால் எழுதப்படிக்கத் தெரியாத ஓட்டர்களும் மற்றவர்களும் எப்பொழுதும் எனக்கு அவர்கள் கஷ்டங்களையும் குறைகளையும் நேரில் தெரிவித்துக்கொள்ள வசதிகளிருக்கின்றன.

### வேண்டுகோள்

ஆகையால் என்னைத் தேர்ந்தெடுத்து, சட்ட சபையின் மூலமாயும் வெளியிலும், தேச சேவகம்புரிய ஒரு தருணத்தை அளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு பொதுஜன ஊழியன்,
எ. என். பரசுராம நாய்க்கன்,
ரைஸ்மில்

## திருச்சியில் மாபெருங் கூட்டம்.

தமிழர் ஒற்றுமையைக் குறித்தும், அடுத்த சட்டசபைத் தேர்தல்களைக் குறித்தும், இவ்வூர் நகர மன்றத்தில் (டவுன் ஹாலில்) அட்சய ஞூ புரட்டாசி மீ 4-உ (20—9—26) திங்கட்கிழமை மாலை 5-மணிக்கு ஸ்ரீமான்கள் ரெ. வீரய்யன், எம். எல். சி. சுரேந்திர நாத் ஆரியா. ஜெ. எஸ். கண்ணப்பர், சேலம் ஆசுகவி, கணபதி பிள்ளை முதலிய கனவான்கள் வந்திருந்து, பேசுவார்களெனத் "தமிழர் முன்னேற்றக்கழக" அமைச்சர் சிவப்பிரகாசம் அவர்கள் அறிவிக்கிறார்.

## பிராமணனைக் குற்றஞ் சொல்வது ஏன்?

### பிராமணத் தன்மையினின்று நீங்கினதினுல் மட்டுமன்று.

(கைவல்ய சாமியார் எழுதுகிறார்.)

II

எல்லா உலகத்திற்குங் காரண காரியமாய் எங்கும் நிறைந்தெல்லாமா யிருக்கு மெதுவோ அதைக் கடவுளென்கிறோம். அந்தக் கடவுளுக்கு ஒரு சிறுகோவில் கட்டி, கல்லைக் கடவுளாக வைத்துப் பூவையுந் தழையையும் போட்டு சோற்றை வைத்துக்கும்பிடுகிறோம். இதுவா உங்கள் மதமென்று கேட்டால் இல்லை இல்லை; எங்கும் நிறைந்த கடவுள் எங்களாராய்ச்சியில் தான் முதல் முதல் கண்டு பிடிக்கப்பட்டார்; எங்கள் மதம் அத்வைதம். யோகம் ஞானம் கடவுளைக்காண எங்களுக்கு வழி. அறிவில்லாதவர்களைக் கரை ஏற்றச் செய்யும் மார்க்கம் கோவில். மனம் ஏகாக்கிரத் தன்மையை அடையவே கோவிலை உண்டு பண்ணினேம். குழந்தைகளுக்கு களி மண்ணுருண்டை மாக்கட்டை பாசி முதலியவற்றை எண்களைச் சொல்லிக் கொடுக்க எப்படி உபயோகப்படுத்துகிறோமோ அப்படியே அறிவில்லாத மூடர்களுக்குக் கடவுள் பக்தியை உண்டு பண்ணு மேற்பாடுக ளென்று வேதாந்தஞ் சொல்லித் தப்பித்துக் கொள்ளுகிறோம். இந்து மதத்தின் உண்மையு மப்படியோ. அறிவுந் தத்துவ விசாரணையு முடையவர்களல்லவா பார்ப்பனர்? இப்படி மப்படி இருப்பதாகத்தானே அவர்கள் நினைவு. பின்னை, ஏன் இவர்கள் கோவிலிலிருந்து கொண்டு கோவில் அவசியம் வேண்டியவர்கள் போவதைத் தடுக்க வேண்டும். ஆத்மாவிற்குரிய ரூபங்கள் சூட்சும மாகையால் அவைகளை யோகாப்பியாசத்தால் ஸ்தூல சரீரத்தில் தெரிந்து விடுபட்டவனே பிராமணனென்று வியாசர் சுகருக்குச் சொல்லி யிருக்கிறார். இந்தப் பார்ப்பானுக்குக் கோவில் வேண்டியதில்லை. இம்சையிலும் பொய்யிலும் பிரியமுள்ளவர்களும் லோபிகளும் எல்லா விதத் தொழிலையு மடைந்து ஜீவிப்பவர்களும் பரிசுத்தத்திலிருந்து விலகியவர்களுமாய் வேற்றுமை யடைந்த பிராமணர்கள் வெவ்வேறு ஜாதியை யடைந்திருக்கிறார்களென்று பிருகு மகாரிஷி பரத்துவாசருக்குச் சொல்லி யிருக்கிறார். இந்தப் பார்ப்பானுக்கு கோவில் வேண்டியிருக்கலாம். சாஸ்திர அபிப்பிராயமும் ரிஷிகளின் வார்த்தைகளும் நமக்குப் பிரதானமாயிருந்தால் கோவிலில் தடுக்கப்படுகிறவனும் (இப்பொழுது இருக்கும் இந்தப் பார்ப்பானும்) ஒன்றுதானே. வேதவியாசர் சொன்ன பார்ப்பானுக்கு கோவில் தேவையில்லை. பிருகு மகாரிஷி சொன்ன பார்ப்பான் கீழான ஜாதியிலும் கீழான ஜாதியாய்விட்டான். இவன் கோவிலிலிருந்துகொண்டு அறிவிலாதவர்கள் விக்கிரகத்தினுல் நன்மார்க்கமடைய ஏற்படுத்தின கோவிலில் அவர்களைத் தடுப்பது பாவமும் அக்கிரமுமல்லவா? உயர்வும் பிழைப்பும் போய்விடுமென்கிற காரணமொழிய இந்து மதத்திற்கு சம்மதமில்லையா? இந்து சாமி அயோக்ய ஒரு பட்ச பத்தியா பழகி இருக்கும். எவ்வளவு நியாயத்தை எடுத்துக் காண்பித்தாலும் வழக்கமில்லை பெரியோர்கள் அப்படி ஏற்படுத்தவில்லை என்றே சொல்லுகிறார்கள். வேதத்தைப் பார்ப்பான் ஓதுக்கொள்ள வேண்டும். வேதத்தில் பார்ப்பான் குலத்தொழில் பிச்சை எடுப்பது என்று விதிக்கப்பட்டிருக்கிறது. இன்னொருவரைக் கெடுப்பதுதான் நமது வழக்கம். எங்களைவிட மற்ற ஜாதியார்கள் அதிகமாகத் தடுக்கிறார்கள்; நாங்கள் என்ன செய்வோமென்று பார்ப்பாரும் சொல்லுகிறார்கள். அது தப்புத்தான். மாகாண கவர்ன்மெண்டுகளையும் இந்தியா கவர்ன்மெண்டையும் பழிக்கி முன்வைத்து இங்கிலீஷ் கவர்ன்மெண்டு விவகாரம் நடத்தும் ராஜதந்திரத்தை யாரறிவார்? அதுபோல் பார்ப்பான் புத்தியைப் பார்த்து இவர்களைவிட்டுப் பிரிந்தாவது போய்விடலாமென்று அநேகம் பேர்கள் பயந்து போய்விட்டார்கள். குரு நானக்கின் சீக்கிய மதமும், ஆரிய சமாஜமும் பிர்மசமாஜமும் இந்து மதத்தின் தந்திரங்களை மேற்கொண்டு வைதிகக் கொடுமையினின்று நீங்கவே ஏற்பட்டவை. மதத்தின் பேரால் அநேக வித்தியாசக் கொடுமைகள் ஸ்தாபிதம் செய்யப்பட்டிருக்கும் இந்தியாவிற்கு சுயராஜ்ஜியம் லாயக்கில்லை என்று வெள்ளைக்காரர்கள் சொல்லுகின்றனர். இதைத் தெரிந்தே குடியரசு மதத்தின் ஆபாசமான அக்கிரமங்களை ஒழிக்க முன் வந்திருக்கிறது. குடியரசைப் போன்ற பத்திரிகைக ளில்லாவிட்டால் இவ்வுண்மைகளைப் பிராமணப் பத்திரிகைகள் பிரசுரிக்குமா? எவ்வளவு யோக்யதையுடைய பார்ப்பானும் மதக் கட்டுப்பாட்டை விட்டுக் கொடுக்க பயப்படுகிறான். இங்கிலீஷ் படித்துப் பெரு நோக்கத்தில் பாடுபடுகிறவர்கள் பட்டும் படாமலும் பேசுகிறார்கள். தப்பித் தவறி உள்ள புரட்டை வெளிப்படுத்தினுல் அந்த பார்ப்பானை எல்லா பார்ப்பானுங் கூடி நயத்தாலும் பயத்தாலும் சரிப்படுத்திவிடுகிறார்கள். ஜட்ஜு சதாசிவ ஐயரைவிட இந்து மதம் படித்தவர்களும் தெரிந்தவர்களும் பார்ப்பனரில் யாரிருக்கிறார்கள்? யாருமில்லை. நேற்று நடந்த சென்னை சட்ட சபையில் சர். டி. சதாசிவ ஐயர் சில உண்மைகளைச் சொல்ல "இந்து மதத்தில் நம்பிக்கையற்றவரென்று" ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஐயர் சொல்லிவிட்டார். இது ஒன்றே உங்களுக்குப் போதுமான சாக்ஷி.

க்ஷத்திரியன் ஞானத்தில் பிராமணனுக்குச் சமமாக இருக்கப்படாதென்கிற பொறாமையை முன்னிட்டு விஸ்வாமித்திரரை பிர்மரிஷி யென்று சொல்ல அருவையப் பட்ட வசிஷ்டரையும், சர்ப்பத்தாலிறக்கும் பரிக்ஷித்துவைப் பிழைப்பிக்க வந்து கார்க்கோடனிடம் லஞ்சம் வாங்கிக்கொண்டு திரும்பின காசிபரையும், மகனுன அஸ்வத்தாமாவுக்குச் சொல்லிக்கொடுத்த வில்வித்தையை, குரு பக்தியால் கற்றுக்கொண்ட ஏகலைவன் என்னும் வேடனுடைய பெருவிரலைக் குரு தக்ஷிணையாக வாங்கிக் கொடுமை செய்த துரோணரையும்விட், வேறு உயர்ந்த பிராமணர்கள் யார்? அப்படி இருப்பார்களோ என்பதும் சந்தேகந்தான். அவர்கள் வேறு

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.)

# சேவையும், பாராட்டுதலும்.

## ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் சொற்பொழிவு.

கோயமுத்தூர் ஜில்லா போர்டு தலைவர் பதவிக்குத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட ராவ் பகதூர் சி. எஸ் இரத்தினசபாபதி முதலியார் அவர்களுக்கு, கொடுமுடி மகா ஜனங்கள் சார்பாய் வேணு உடையா கவுண்டர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஸ்ரீமான் சந்திர சேகரக் கவுண்டர் உபசாரப் பத்திரம் வாசித்து கொடுக்கப்பட்ட காலத்தில் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கரைப் பேசும்படி அக்கிராசனர் கேட்டுக் கொண்டதில் "அவர் பொதுநல சேவையும் பொதுஜனப் பாராட்டுதலும்" என்கிற விஷயமாய்ச் செய்த உபன்யாசச் சுருக்கமாவது:-

கனவான்களே!

நான் உங்கள் அழைப்புக்கு வந்தேனே யொழியப் பிரசங்கம்செய்ய வரவில்லை. முதலியாரைப் பற்றி சில வார்த்தைகள் சொல்லும்படி அக்கிராசனர் கட்டளையிட்டார். நான் அவரை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். ஸ்ரீமான் முதலியார் எனது நண்பர்; அவரைப்பற்றி நான் புகழ் பேசுவது எனக்கும் ஒழுங்கல்ல; ஸ்ரீமான் முதலியார் அவர்களும் இதைப் பொறுக்க மாட்டார். அல்லாமலும் இது சமயம் அவர் தேர்தல் வேலையில் இருக்கிறார். நான் எதாவது இப்பொழுது அவரைப்பற்றி பேசுவதாயிருந்தாலும் அதை பொது ஜனங்களோ அல்லது அவர் போன்ற அபேக்ஷகர்களோ முதலியாருக்கு ஒட்டு வாங்கிக் கொடுக்கதான் அவரைப் புகழ்வதாய் நினைக்கக் கூடும். தவிரவும் ஸ்ரீமான் முதலியார் அவர்களும் இம்மாதிரி ஆடம்பரத்தையும் வரவேற்பையும் விரும்பும் சுபாவமுடையவரல்லர் என்பது என்னுடைய அனுபவம். ஆனால் என்ன செய்வார் பாவம்; இந்தக் காலத்தில் சட்டசபைத் தேர்தலுக்கு நிற்பவர்களுக்கு இந்த மாதிரி ஆடம்பரமும் வரவேற்பும் விளம்பரங்களுமே பிரதான யோக்கியதாம்சமாய்ப் போய் விட்டதால், இவரும் சட்டசபைத் தேர்தலுக்கு நிற்பதால், இந்த வேஷத்தையும் போட்டுக் கொள்ள வேண்டியதாயிற்று. பொது ஜனங்களும் தாங்கள் தெரிந்தெடுக்கும் கனவான்களிடம் இந்த வகைய விளம்பரங்களைத்தான் எதிர்பார்க்கிறார்களே அல்லாமல் உண்மையான பொதுநலத்திற்குத் தேவையான யோக்கியதையை எதிர்பார்ப்பதில்லை. இதன் பலனாக பொதுநல நன்மையை நாடி உழைப்பவர்கள் இப்பதவிகளுக்கு வர முடியாமல் போனது ஒன்று, வந்தாலும் அவர்களை அறிந்து தெரிந்தெடுப்பதற்கு ஒட்டர்களுக்கு ஞானமில்லாமல் போனது ஒன்று, ஆகிய இந்த இரண்டு குணங்களும்தான் இப்போதிய சீர்திருத்தத்தின் பலனாய் ஏற்பட்ட தேர்தல்களின் தத்துவமாய்ப்போய்விட்டது. இதன் பலனாகவே அந்தஸ்தானங்களும் பொது நலத்திற்கு யோக்கியதை அற்றதாகப் போய்விட்டன. உதாரணமாக எவ்வளவு பொது நல ஊழியர்களாயிருந்தாலும் எவ்வளவு சுய நல மற்றவர்களாயிருந்தாலும் எவ்வளவு பெரிய தியாகத்திற்கும் தயாராயிருப்பவர்களானாலும் தற்கால சட்ட சபைக்கு நிற்க முடியாதவர்களாகவே இருக்கிறார்கள்.

அல்லாமலும் இதற்கு நேர் விரோதமாய் எவ்வளவு சுயகாரியப் புலிகளாயிருந்தாலும், எவ்வளவு தூரம் ஏழை மக்களையும், குடியானவர்களையும், தொழிலாளர்களையும், சர்க்காருக்குப் பலி கொடுத்துத் தங்கள் யோக்கியதையையும் தங்களுக்கும் தங்கள் பிள்ளைகுட்டிகளுக்கும் உத்தியோகத்தையும் சம்பாதித்துக்கொள்ளுபவர்களானாலும் எவ்வளவு சிறிய தியாகத்திற்கும் பயப்படுபவர்களானாலும் இப்படிப்பட்டவர்களே தற்கால சட்ட சபைக்கு நிற்க சவுகரியமுள்ளவர்களாகவே இருக்கிறார்கள். ஏன்? சட்ட சபைக்கு நிற்பதென்றால் பத்தாயிரம், இருபதாயிரம், ஐம்பதாயிரம் ரூபாய்கள் செலவழிக்கத்தயாராயிருக்க வேண்டும். ஆதலால் பணக்காரர்கள்தான் இந்தவேலைக்கு லாயக்காய்ப்போய் விட்டார்கள். தேசபக்தர்களுக்கும் பொது நல சேவைக்காரருக்கும பணம் இருக்காது. பணக்காரர்கள் என்பதே தேசத்தையும் ஏழைகளையும் குடியானவர்களையும் தொழிலாளிகளையும் கெடுத்துத்தான் பணம் சம்பாதித்தவர்கள் என்பது சத்தியம். யோக்கியர்களுக்கும் தேசபக்தர்களுக்கும் பணம் சம்பாதிக்கும் வழிக்கும் வெகுதூரம். ஆதலால் அவர்கள் ஏழைகளாய்த்தான் இருப்பார்கள். அல்லாமலும் ஒட்டர்களோ மிகுதியும் ஏழைகள். மிகுதியும் பாமர ஜனங்கள் இவர்களை விலைக்கு வாங்குவது வெகு சுலபம். அம்மாதிரி காரியத்திற்கு உண்மையான பொது நல ஊழியர்கள் சம்மதிக்க மாட்டார்கள். தேர்தலுக்கு நிற்பதானால் கணக்குப் பிள்ளை மணியகாரர், பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்கள், முதலியவர்கள் தயவு வேண்டியதாய்ப் போய்விட்டது. அவர்களோ அரை வயிற்றுக் கஞ்சிக்கும் மார்க்கமில்லாத சம்பளத்தை உடையவர்கள். அன்றியும் அந்தந்த கிராமத்தில் செல்வாக்குள்ளவர்கள் நாட்டாண்மைக்காரர்கள், பெருத்த குடித்தனக்காரர்கள். இவர்கள் தயவும் வேண்டும். இப்படிப்பட்டவர்களில் 100-க்கு 90-பேர் கடன்காரர்கள். ஜப்தி வாரண்டு முதலிய கஷ்டத்தில் சிக்கித் தத்தளித்துக் கொண்டிருக்கிறவர்கள். இந்த இரண்டு கூட்டத்திலும் உத்தமமானவர்கள் சிலர் இருப்பது எனக்குத் தெரியும். ஆனாலும் பெரும்பான்மையோர்கள் இந்த நிலையில் இருப்பதால் தேர்தலில் நிற்பவர்கள் இதை உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள்; உதாரணமாக "ஒட்டர்களைக் கூட்டிவந்து ஒட்டு வாங்கிக் கொடுப்பதற்கும் அவர்களுக்கு தாகத்திற்கு உதவுவதற்கும் செலவுக்காக வைத்துக் கொள்ளுங்கள்" என்று கணக்கு மணியகாரர்களிடம் ஒட்டு எண்ணிக்கைக்குத் தகுந்தபடி 100, 200-ரூபாய்களை சட்ட சபைக்கு நிற்பவர்கள் வலியக் கொடுக்கிறார்கள். இதை எப்படி வேண்டாம் என்று சொல்ல மனம் வரும். அதுபோலவே பெரிய குடித்தனக்காரரைப் பார்த்து "என்னுடைய தேர்தலுக்கு வேலை செய்யக்கூட தங்களுக்கு சாவகாசமில்லைப்போல் இருக்கிறது. ஏதோ ஒரு பாக்கி தீர்க்கும் விஷயமாய்த்தாங்கள் அடிக்கடி திரிவதாகக் கேள்விப் பட்டேன். இந்தாருங்கள் ஆயிரமோ, ஐயாயிரமோ, கொண்டு வந்திருக்கிறேன். பாண்டோ அடமானமோ எழுதிக்கொடுத்து இன்றைக்கே பெற்றுக் கொள்ளுங்கள். எலக்ஷன் தீர்ந்த பிறகு இக்கடனைக் கட்டிவிடலாம்." என்று சொன்னால் எந்த மிராசுதாரர்களாவது வேண்டாமென்று சொல்லுவார்களா? காலமோ பஞ்சகாலம். 3, 4 வருஷமாய் மழையில்லை. என்ன செய்வார்கள்? இம்மாதிரியே தேர்தலுக்கு நிற்கிறவர்கள், பொது ஜனங்களை நாணயக் குறைவாய் நடக்கக் கட்டாயப்படுத்தி விடுகிறார்கள். இதன் மூலம் ஒரு பணமில்லாதவனோ அல்லது பணமிருந்தும் இம்மாதிரி நாணயக் குறைவான காரியங்களுக்குக் கட்டுப்படாதவனோ, சட்ட சபைக்கு நிற்க மார்க்கமில்லாமலே போய்விட்டது. ஆதலால் பொதுநல சேவையும பொதுநலப்பாராட்டுதலும், உண்மையான பொதுநல சேவையாயும் உண்மையான பாராட்டுதலாயும் இல்லை. சேவைக்கு வருகிறவர்களுக்கும் உள் எண்ணம் சுயநலமாய் விட்டது. பாராட்டுகிறவர்களுக்கும் உள் எண்ணம் சுயநலத்திற்காகவே ஆய்விட்டது. இந்த நிலைமையில் உண்மையான பொதுநல சேவை செய்கிறவர்களின் கடமை என்னவென்றால் போலிப் பொதுநலச் சேவை செய்கிறவர்களை வெளிப்படுத்துவதும் சுயநலத்துக்காக பாமர ஜனங்களை ஏமாற்றி, ஒட்டு வாங்கிக் கொடுக்கும் தரகர்களின் ஏமாற்றத்திலிருந்து தப்புவிப்பதும்தான் பொதுநல சேவையும் பாராட்டுதலும் ஆகும் என்று அபிப்பிராயப்படுகிறேன் இதற்காக மன்னிக்கவும்.

---

# திருமணச் சன்மானம்.

திருவண்ணாமலை தாலூகா தண்டராம்பட்டு, தாலூகா போர்டு ஜில்லா போர்டு மெம்பரும் முனிசிபல் கவுன்சிலரும் கௌரவ அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தாருமான ஸ்ரீமான் இரங்கசாமி ரெட்டியாருக்கு நிகழ்ந்த திருமண சுபதினத்தில் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றங் கருதியுழைத்து வரும் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்களைப் பாராட்டி அம் முயற்சிக்கு மேலும் ஊக்கம் உண்டாக்கும் அறிகுறியாகக் கீழ்காணும் பதின் மூன்று அன்பர்கள் சந்தாதாரராய்ச் சேர்ந்து கொள்வதாய்த் தெரிவித்துள்ளார்கள். இவ்வன்பர்களின் தேசபக்தியையாம் பாராட்டுவதோடு ஏனையோரும் இவ்வன்பர்களைப்பின் பற்றுமாறு வற்புறுத்துகிறோம்.

M. B. ரங்கசாமி ரெட்டியார்,
டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பர்.

A. ராமச்சந்திர ரெட்டியார்,
தாலூக்கா போர்டு வைஸ் பிரசிடெண்டு.

M. A. ஆதிமூல உடையார்.
பஞ்சாயத்துக் கோர்ட் பிரசிடெண்டு.

கோபாலசாமி முதலியார் B A. B,L.
வக்கீல்,

## "ஸ்வராஜ்யாவின்" ஜாலவித்தை.

ஸ்ரீமான் ஐயங்காரைப்பற்றி மகாத்மா.

(உடுமலை இராமசாமி நாயுடு எழுதுகிறார்.)

எந்த விதத்திலாவது நமது மயிலாப்பூர் ஸ்ரீமானைச் "சர்வாதிகாரி" ஆக்கிவிடவேண்டுமென "ஸ்வராஜ்ய" "மித்திரன்" "இந்து" முதலிய பிராமணப் பத்திரிகைகள் அல்லும் பகலும் மந்திராலோசனை செய்துவரும் விஷயம் பகிரங்க ரகஸ்யம். ஒருநிறுசாகப் பெரும்பான்மையோரைச் சரிபடுத்தி அஸ்ஸாம் "காங்கிரஸ் தலைமையை" ஆக்ரமித்து, "தேர்தல் கொண்டாட்டம்" கம்பீரமாய் நடத்திக் கொண்டிருக்கிற சந்தர்ப்பத்தில் சும்மா இருக்கிற மகாத்மா சனியனுக வந்து வாய்த்தார். நமது மயிலாப்பூர் ஸ்ரீமானைப்பற்றிப் பார்ப்பனரல்லாத தலைவர்களும், பொது மக்களும், என்ன அபிப்பிராயங்கொண்டிருக்கிறார்கள் என்பது, நேயர்கள் உணர்ந்த விஷயமாகும். இவர்களுடைய அபிப்பிராயத்திற்கும், காந்தியடிகளின் அபிப்பிராயத்திற்கும், கடுகளவு வேற்றுமையும் இல்லையென்பது பின் வருவனவற்றால் விளங்கும். மகாத்மா சொல்லுவதாவது:—

"ஆத்திரம் அவசரம் இவைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும் ஐயங்காருடைய உற்சாகம், அவரை தேசியப் போராட்டத்தில், முழுவேகத்துடன், அதி தீவிரமாகக் கலந்துகொள்ளும்படி செய்கிறது. அவர் நினைத்த மாத்திரத்திலேயே மறு சிந்தனைக்கான கவலையின்றி, முழு கவனத்துடன் காரியத்தில் பிரவேசித்து விடுகிறார்" என்று ஜாக்கிரதையாகவும், சமத்காரமாகவும், மொழிகளை அடுக்கியிருக்கிறார். நமது பெரியார் யாரையும் என்றும் குறை கூற மாட்டார். உண்மையை ஒளிக்கவுமாட்டார். ஸ்ரீஜத் ஐயங்கார் தலைவர் பதவியைப்பகிரதப் பிரயத்தனஞ்செய்து ஆக்ரமித்துக் கொண்டார் என்பதே மகாத்மாவினது வாக்கின் சாரம்: எப்படியெனில் பொதுநலகௌரவஸ்தானங்களை ஏற்றுக் கொள்வதற்குப் பொது ஜனபிமானம் சிறந்திருக்க வேண்டும். அதன் பலனுய் அந்த கௌரவம் தானே தம்மைத் தேடி வந்தாலொழிய சம்மதிக்கக்கூடாது. எத்தனை இந்தியபத்திரிகைகள் ஸ்ரீமான்தான் தலைவராக வேண்டும் எனக் கிளர்ச்சி செய்தன? மகாத்மாவாவது, இவர் தேசத்துக்காகத் தியாகம் செய்திருக்கிறார் என்று கூறியிருக்கிறாரா? இல்லை; இல்லை. ஆத்திரம், அவசரம், முழு வேகம், அதி தீவிரம், சாதகபாதகத்தை யோசிக்கும் அறிவின்மை, ஆகிய வார்த்தைகளால் அலங்கரித்திருக்கிறார். ஊன்றி நோக்குவார்க்கு "அழையாமல் நுழைந்தார்" என்ற உண்மை தொனிக்காமலிராது.

நமது தலைவர் ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் முதலியோர் திரு. ஐயங்கார் தலைமை ஸ்தானங்கள் எல்லாவற்றையும் தந்திரத்தால் சம்பாதித்தார் என்று கூறி வருவதற்கும் மகாத்மாவின் கருத்துக்கும் என்ன வேற்றுமை இருக்கின்றது? சிக்கலும், பொறுப்பும் வாய்ந்த கௌரவஸ்தானங்களை உண்மைப் பெரியோர்கள் ஒத்துக் கொள்ளப்பின் வாங்குவார்கள்

தசரதர் உலக ஆட்சியை ஏற்குமாறு வேண்ட ஸ்ரீராமபிரான் ஏன் மறுத்தார்? தற்காலத்திலும், மகாத்மா, சில பொறுப்பு வாய்ந்த தலைவர்கள் கையெழுத்திட்டனுப்பிய விண்ணப்பத்திற்கு என்ன பதிலிறுத்தார்? ஸ்ரீஜத் அன்சாரி முதலிய பெரியோர் ஏன் முன் வரவில்லை? நமது ஸ்ரீமானுக்குள்ள தேசாபிமானமும், அரசியல் ஞானமும், கல்வியும், யோக்யதையும், அவர்களுக்கின்மையாலா? என்பதை நேயர்களே உணர்வாராக. தன்னலமும், தம்நலமும், ஊறிப்போயிருத்தலால் ஆத்திரமும் அவசரமுங் கலந்த உற்சாகத்தில் நல்ல புத்தியை நழுவவிட்டு, மனம் போன போக்கில், முன் பின் யோசிக்காமல், வேகமாய்ப் பாய்கிறார் என்றே காந்தியடிகளின் வாக்கிலிருந்தும், அவருடைய செயல்களிலிருந்தும் ஊகிக்க வேண்டியிருக்கிறது.

நிற்க "காங்கிரஸ்காரர்களால் அளிக்கப்படும் எல்லா உதவியும் ஐயங்காருக்குத் தேவை" என்பதினால், நமது திரு ஐயங்காருக்குத் தற்போது காங்கிரஸ் காரர்களின் உண்மையான உதவி இல்லையென்பதும், பெரும்பான்மையோரால் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்குத், தற்காலம் தான் தலைவராயிருந்து வரும் செல்வாக்கையும், இன்னொரு ஐயங்கார் ஸ்வாமிகள் காரியதரிசியாயிருந்து வரும் செல்வாக்கையும் துஷ்ப் பிரயோகம் செய்தமையே காரணம் என்பதும் விளங்கவில்லையா?

அன்றியும் "மிகக் கஷ்டமான காரியங்களில் அவர் ஈடு பட வேண்டியிருத்தற் பொருட்டு அவர்பால் நான் அநுதாபங் கொள்வதுடன் அக் கஷ்டங்களை எளிதாகத் தீர்ப்பதற்கான வழியையும் ஞானத்தையும் அவருக்குக் கொடுக்குமாறு நான் கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்" என்று கூறும் மகாத்மா காந்தியடிகளின் நோக்கமென்ன? அவர் எப்போதும் உண்மையே உரைப்பவர். முதலில் ஸ்ரீமானது தகுதி இன்மையைக் கொஞ்சம் குறிப்பாகவும், சமத்காரமாகவும், சொல்லிப் பார்த்தார். அவரது மனச்சாட்சி இடங்கொடாமல் நெருக்கவே கொஞ்சங்கூட யோக்கியதை இல்லை என்பதைப் பச்சை வெட்டாக உணர்த்தி விட்டார். தன்னோடு ஒத்துழைக்கும் தலைவர்களுமில்லை புத்தியுமில்லை, இவர் ஏன் இதில் சிக்க வேண்டும் என்று அவரது அறியாமைக்கு இரங்குவதோடு இவரால் நாட்டுக்கு என்ன தீங்கு விளையப்போகிறதோ என அஞ்சிக், கடைசியாக, நாட்டைக் காக்க வேண்டிய பொறுப்பைக் கடவுள் தலையில் போட்டு விட்டார்.

இதைக் கண்ட நமது ஸ்வாராஜ்யாவுக்கு ஐயங்கார் குட்டு வெளியாகிவிட்டதே யெனப்பதட்டம் வந்து விட்டது. மகாத்மாவுக்கு முட்டாள் பட்டங் கட்டி விடலாமென்று பார்த்தாலோ ஆபத்து உடனே வரும் என்ற நிச்சயபுத்தி இதற்குண்டு. தேர்தல்களில் இவருடைய பெயரை முழக்கிப் பூஜை செய்து விட்டு இந்த நெருக்கடியான நிலைமையில் தாக்கினால் அடுத்த தேர்தல்களில் "சூன்ய பிராப்தி" தானென்ற உண்மையை மனதில் வைத்து மகாத்மாவின் வாக்கியங்களில் இந்திர ஜாலத்தை நுழைக்க ஆரம்பித்துவிட்டது. வெள்ளி. 10—9—26-உ "ஸ்வாராஜ்யா"வின் ஒரு தலையங்கத்தில்


"தலைமைப் பதவிக்கு ஸ்ரீஜத் ஐயங்கார் மஹாத்மாவின் பாராட்டு. தேர்ந்தெடுக்கப்பட்டவரின் தகுதியுடைமை" என்று பெரிய பெரிய எழுத்துக்களில் தலைப்புக் கட்டப்பட்டிருக்கிறது. மகாத்மாவின் மொழிகளைத் தேடித்துருவிப் பார்த்ததில் "ஐயங்கார் தலைமைப் பதவிக்கு தகுதியுடையவர்" என்று மரியாதைக்குக் கூட ஒருவார்த்தையுமில்லை. அன்றியும் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் "தகுதியற்றவர் "கட்சியாரின் ஒத்துழைப்பில்லாதவர்" "சமாளிக்கும் புத்தியில்லாதவர்" எனத் தெரிவித்து விட்டார். "ஸ்வராஜ்யாவின்" ஜாலத்தையும் வியக்யானத்திறமையையும் யாம் பாராட்டுகிறோமாயினும், காங்கிரஸ் ரூ. 10000த்தையும் வெறுஞ்சட்டிதாளிப்பதாகிய அற்பத்தனமான இழிசெய்கையில் நாசமாக்குவதைக் கண்டிக்காமலிருக்க முடியவில்லை.

"சுதேசமித்திரன்" திரு. ஐயங்கார் "தியாகி" "கர்ணப்பிரபு" எனப் புகழ்ந்து "தாஸ்" "நேரு" ஐயங்கார் என வட இந்தியாவுக்கு உந்திவிட்டானே யொழிய நாட்டுக்காக அவர்களைப்போல் என்ன தியாகம் செய்தார் என்பதை வெளிப்படுத்தவில்லை. நகரசபைத் தேர்தலில் "காலிகளுக்குப் பணங்கொடுத்தது தியாகமாகவும். கொடையாகவும் நமது "மித்திரன்" கண்ணுக்குப் புலப்பட்டிருக்கலாம் என்று நினைக்கிறோம். "மித்திரன் கூறுவதைப்பற்றி நாம் ஏன் ஆச்சரியப்படவேண்டும்.

## சென்னை சட்ட சபையின் தேர்தல்.

வரும் நவம்பர் மாதம் நடைபெறும் சென்னை சட்ட சபைத் தேர்தலில் வட ஆற்காடு ஜில்லா மற்றும்மதிய சல்லாதாரின் தொகுதிக்காக ஏற்பட்டுள்ள ஸ்தானங்கள் மூன்றிற்கும் குடியாத்தம் டவுனில் மேன்மை பொருந்தியவரும், ஷை டவுன் நகர பரிபாலன சபையில் நடுநாயகமாயும், திருப்பத்தூர் தாலூக்கா போர்டு ஷை ஜில்லா போர்டு முதலியவைகளிலும், அங்கத்தினராய் வீற்றிருந்து, ஜில்லா வாசிகள் அனைவர்களுக்கும், தம்மால் கூடிய ஊழியத்தைத் தடையிலாதியற்றி பொன்மலர் போலும் பிரகாசியாநின்ற, உயர் திரு எம். வி. பீமராஜா முதலியாரவர்களும், இராயவேலூர் ஸ்ரீமான் ராவ் பஹதூர் காரர் கிருஷ்ணசாமி நாயுடுகாரவர்களும், ஆரணி ஸ்ரீமான் எ. என். பரசுராம நாயக்கரவர்களும், அபேக்ஷகர்களாய் நிற்கப் போகிறார்கள். இச் ஜில்லாவாசிகளனைவரும் மேற்கண்ட கனவான்களையே தெரிந்தெடுப்பார்கள் என்று இஜ்ஜில்லாவெங்கும் பலத்த வதந்தி நிலவுகின்றது. வெளி ஜில்லாவாசிகளை, இவ்வட ஆற்காடு ஜில்லாவின் பிரதிநிதிகளாக, சட்ட சபைக்கு அனுப்பலாகாதென்னும் பெருங்கிளர்ச்சி நடந்துவரும் இச்சமயத்தில் இம்மூன்று கனவான்களும் அபேக்ஷகராக நிற்க முன் வந்தது, ஜில்லாவாசிகளின் பெருந்தவப்பயனே என்று கூறுவது மிகையாகாது.

· வடஆற்காடு ஜில்லா வாசிகள்.

பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித்தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கியாட்லாக் இனம்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

ஸ்ரீமான்

# ஆர். கே. ஷண்முகம் செட்டியார்.


ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் இம்மாதம் 16-உ கோவையிலிருந்து கொழும்பு மார்க்கமாக ஆஸ்ற்றேலியாவுக்குப் பிரயாணமாகிறார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலுள்ள பார்லிமெண்ட் பிரதிநிதிகள் எல்லோரையும் ஆஸ்ற்றிய அரசாங்கத்தார் தருவித்து ஒவ்வொரு பார்லிமெண்டின நடவடிக்கைகளையும் போக்கையும் பற்றி எடுத்துப் பேசி ஒருவருக்கொருவர் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை பரிமாறிக் கொள்வதற்கும் நன்மையான முறைகளை ஒவ்வொருவரும் ஒருங்கே ஏகயாளவும் தீமையின் முறைகளைக்கை விடவும் ஒரு பயிற்சி ஏற்படுவதற்காக கூடப்படும் ஏகாதிபத்தியமந்திராலோசனை சபைகளின் பிரதிநிதிகள் கூட்டமொன்று ஆஸ்த்ரேலியா அரசாங்கத்தாரால் கூட்டப் படுகிறது. இக் கூட்டத்திற்குப் பிரிட்டிஷாருக்குள்ள "குடியேற்ற நாடுகளின் பார்லிமெண்ட்" என்று சொல்லப்படும். மந்திராலோசனை சபையார்கள் எல்லாம்தங்கள் தங்கள் சபைச் சார்பாகபல் பிரதி நிதிகளை தெரிந்தெடுத். தனுப்புகிறார்கள். அது போலவே நமது இந்தியாவுக்கும் ஷை மகாநாட்டுக்கு இந்திய பிரதிநிதியாக இந்தியா சட்ட சபையாரும் ராஜாங்க சபையாரும் நமது ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரையும் மற்றொரு ஐரோப்பியரையும், தெரிந்தெடுத்திருக்கிறார்கள். ஷை மகாநாட்டுக்குச் செல்லும் சுமார் 50 பிரதிநிதிகளில் நமது செட்டியார் ஒருவர்தான் கருப்பு மனிதர். மற்றவர்கள் எல்லாம் வெள்ளைக்காரர். அல்லாமலும் இந்த மகா நாட்டுக்குப் பிரதிநிதிகளை அனுப்புவதில் முக்கியமாய்கவனித்த விஷயம் அரசியல் மந்திராலோசனை அறிவும், அரசியல்அனுபவமும், ஆங்கில பாஷாஞானமும், வாக்குவன்மையும், பொறுப்பையுமே பிரதானமாகக் கருதப்பட்டிருக்கிறது. இவ்வளவு உயர் குணங்களோடு கூடிய ஒரு இந்தியர், இந்திய பாமர ஜனங்களின் பிரதிநிதி சபை என்று சொல்லிக் கொள்வதான இந்திய சட்ட சபையும், மிராஸ்தார்கள் பிரதிநிதிசபை என்று சொல்லப்படுவதான அரசாங்க சபையும் நமது ஸ்ரீமான் ஆர். கே. சண்முகம் செட்டியார்தான் என்றும், அவரே இம்மஹா நாட்டுக்குப் போகத் தகுந்தவர் என்றும் கருதி, அவரையே ஷை சபைகள் மனப்பூர்வமாய்த் தேர்ந்தெடுத்திருக்கின்றன. இப்படிப்பட்ட ஒருவர் இவ்வளவு பொறுப்புள்ள காரியத்திற்குப் போவதைப் பற்றியும், அவரின் யோக்கியதாம் சங்களைப் பற்றியும், போகும் காரியங்களின் விபரத்தைப் பற்றியும், நமது நாட்டுப் பாமர ஜனங்கள் அறியும்பொருட்டு, இதுவரையில் ஒரு பார்ப்பனப் பத்திரிகையும் வெளிப்படுத்தவே இல்லை. இந்த மாதிரி ஸ்தானங்களுக்கு யாராவது ஒரு அகாமதேயப் பார்ப்பனன் ஒருவன் போவானேயானால் அவனைப்பற்றி பெரிய பெரிய தலையங்கங்களும் பட்டங்களும் (இண்டர்வியூ) "பேட்டி கண்டு பேசிய அபிப்பிராயங்களு"ம் பத்தி பத்தி



R. K. ஷண்முகம் செட்டியார் B. A. B. L., M. L. A.

யாய் விளக்கும். ஆங்காங்கு, பல உபசாரப் பத்திரிகைகளும் வழியனுப்பு உபசாரங்களும் நடக்காதனகூட நடந்தனவாக திருபங்கள் நிறையும். இதுவரை எத்தனையோ பார்ப்பனர்கள் நமது ஸ்ரீமான் செட்டியார் அவர்களைப் போல் பொது ஜனங்களால் தெரிந்தெடுக்கப்படாமல், இந்தியாவுக்குத் துரோகம் செய்வதற்கென்றே சர்க்கார் ஊழியராகச் சர்க்காரார் சொல்லிக் கொடுத்த வார்த்தையைக் கிளிப்பிள்ளைபோல் போய்ச் சொல்லி விட்டு வரவும், தன் இஷ்டப்படி ஒருவார்த்தை கூட சொல்ல அதிகாரமில்லாத நிலையில் அடிமையாய்ச் சென்ற பார்ப்பனர்களைப் பற்றிகூட நமது பார்ப்பனப் பத்திரிகைகள் எவ்வளவு எழுதி இருக்கின்றன என்பது வாசகர்களுக்குத் தெரியும். அப்படியிருக்கப் பொதுஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட நமது செட்டியாரைப்பற்றி ஒரு வார்த்தையாவது எந்தப் பத்திரிகையாவது எழுதிற்று? மகாத்மா காந்தியைச் சிறைக்கனுப்ப உதவியாயிருந்த ஸ்ரீமான் ஸ்ரீனிவாச சாஸ்திரிகளும் காங்கிரஸ் பெயரைச் சொல்லி ஓட்டுப் பெற்று மாதம் 5500 ரூபாய் சம்பளத்திற்காக சர்க்கார் அடிமையான ஸ்ரீமான் சி. பி. ராமசாமி அய்யரும், காங்கிரசினால் பஹிஷ்கரிக்கப்பட்ட ஏகாதிபத்திய கண்காட்சிக்கு இந்தியாவின் சார்பாய்ச் சென்ற சர்க்கார் ஊழியரான ஸ்ரீமான் டி. விஜயராகவாச்சாரியாரும், வெளிநாடுகளுக்குப் போன காலங்களில் அவர்கள் படம், அவர்கள் புகழ், சரித்திரம் பேட்டி கண்டுபேசிய விபரம் முதலியதுகளை இப்பார்ப்பனப் பத்திரிகைகள் எவ்வளவு விளம்பரங்கள் செய்தன என்பது யாவருக்கும் தெரியும். இம்மூவர்களும் சுயராஜ்யத்திற்காக பாடு படுவதாய்ச் சொல்லும் நமது பார்ப்பனப் பத்திரிகைக்காரர் அபிப்பிராயத்திற்கும் காங்கிரசுக்கும் சுயராஜ்ய கட்சிக்கும் முற்றும் மாறுபட்டவர்களாயிருந்தும், அவர்களை விளம்பரப்படுத்துவதில் நமது 'இந்து' 'சுதேசமித்திரன்' 'சுயராஜ்யா' 'நியூ இந்தியா' முதலிய "தேசியப்பத்திரிகைகள்" கொஞ்சமும் பின் வாங்கவில்லை. ஆனால் நமது ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் காங்கிரஸ் வாதி சுயராஜ்யக்கக்ஷி "கொறடா" தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசி, இவ்வளவு யோக்கியதையுடன் காங்கிரஸ் பார்ப்பனக் காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சி பார்ப்பனக்கட்சி என்கிற உண்மையை பாமரஜனங்கள் அறியாதபடி மறைக்கவும் இப்பார்ப்பனர்கள் வெளியில் போய் பார்ப்பனப் பிரசாரம் செய்வதில் கல்லடி, சாணி உருண்டை, மலச் சட்டி, முதலியதுகள் பார்ப்பனர் பேரில் விழாமல் காக்கவுமான காரியத்திற்குப் பார்ப்பன ஆயுதமாயிருந்து இப்பார்ப்பன அபிப்பிராயத்தான் இந்திய தேசிய அபிப்பிராயமென்றும், சொல்லி வந்த இப்படிப்பட்ட ஒரு உபகாரிக்கே இவர்கள் இவ்வளவு துரோகம் செய்வார்களானால் மற்றவர்களுக்கு எவ்வளவு கொடுமை செய்ய மாட்டார்கள். இன்றைய தினமும் நமது சென்னை மகாணத்தை எடுத்துக்கொண்டாலும் ஏறக்குறைய 4 கோடி ஜனங்களுக்குள் விஷயங்களை பாகு படுத்தி மக்களுக்கு நன்றாய் விளக்கும்படி செய்யவும், விவகார ஞா

இதன் தொடர்ச்சியை 10ம் பக்கம் பார்க்க.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே


# குடி அரசு.

அக்ஷய-ஹூ புரட்டாசி-மீ 3-உ


## பார்ப்பனர் தேர்தல் முழக்கம்.

சென்னையில் தேர்தல் முழக்கம் தெருத் தெருவாய் முழங்குகிறது. பார்ப்பனர் ஆதிக்கத்திற்காக ஸ்ரீமான்கள். எஸ். சீனிவாச அய்யங்கார் எஸ். சத்திய மூர்த்தி சாஸ்திரிகள் எ. ரங்கசாமி அய்யங்கார் எம். கே. ஆச்சாரியார் முதலியவர்கள், மடாதிபதிகள் பணத்தாலும், மகந்துக்கள் பணத்தாலும், தெருத்தெருவாய் ஜில்லாஜில்லாவாய்ப் பார்ப்பனரல்லாத சில கயவர்களையும் சேர்த்துக் கொண்டு, தேர்தல் முழக்கம் செய்கிறார்கள். அம்முழக்கத்தில் உபயோகிக்கும் தந்திரங்கள் என்னவென்று பார்ப்போமானால், பார்ப்பனரல்லாதார் முற்போக்குக்காக ஏற்படுத்தப்பட்டு நடைபெற்றுவரும் இயக்கங்கள்மீது, பார்ப்பனரல்லாத பாமர மக்களுக்கு வெறுப்பு உண்டாகும்படி தூஷணை செய்வதும், தேசத்திற்கும், பார்ப்பனரல்லாத மக்களுக்கும், உழைத்துவரும் தலைவர்கள் மீதும், தொண்டர்கள் மீதும், பொல்லாப்புகளையும் பழிகளையும், சொல்லி அவர்களிடம் பொது ஜனங்களுக்கு அதிருப்தி உண்டாகும்படி செய்வதுமாகவே இருக்கின்றன. இதன் பயனாய்ப் பார்ப்பனரல்லாத பாமரமக்களை ஏமாற்றி, அவர்கள் ஓட்டுப் பெற்றுசென்னை சட்ட சபை, இந்தியா சட்ட சபை முதலிய ஸ்தானங்கள் பெற்று, அவற்றின் மூலம் ஏற்பட்ட உத்தியோகங்கள், அதிகாரங்கள், முழுவதையும் தங்கள் இனத்தவர்களாகிய பார்ப்பனர்களுக்கே கிடைக்கும்படிச் செய்து பார்ப்பனரல்லாதாரை நுழையக் கூடாதவர்களாகவும் மற்றும் நிரந்தர ஈன ஸ்திதியிலேயே இருக்கும்படியானவர்களாகவும், செய்துவிடப் பார்க்கிறார்கள். குறிப்பாய் பார்ப்பனரல்லாதாருக்கு உழைக்கும் ஜஸ்டிஸ் கக்ஷியையும், அதன் தலைவர்களில் பிரமுகர்களான ஸ்ரீமான்கள் பனகால் அரசர், எ. ராமசாமி முதலியார், ஆகிய இருவர்களையும் தான் இப்போது நமது பார்ப்பனர்கள் முக்கிய விரோதிகளாய் நினைத்துக் கொண்டு, அவர்களை எந்த வழியிலாவது ஒழிப்பதே தங்கள் கடனாய் வைத்து "காங்கிரஸ்," "தேசம்," "சுயராஜ்யம்," என்கிற ஆயுதங்களை அதற்காக உபயோகித்து வருகிறார்கள். அதோடு மாத்திரமல்லாமல் ஸ்ரீமான் பனகால்அரசர் மீதும், எ. ராமசாமி முதலியார் மீதும் சில ஈனத் தனமான பழிகளையும் சுமத்தி வருகிறார்கள் என்றும் அறிகிறோம்.. அவைகள் என்னவென்றால் தங்கள் அதிகாரத்தின் கீழ் உள்ள காரியங்களைச் செய்வதில் பணம் சம்பாதிக்கிறார்கள் என்று சொல்லி வருவதோடு சில பார்ப்பனரல்லாத பதர்களையும் கொண்டு வெளியிடங்களிலும் வக்கில் குமாஸ்தா பார்ப்பனன், ஓட்டல்காரப் பார்ப்பனன், பொதுப் பெண்களிடம் தூது செல்லும் பார்ப்பனன், முதலானவர்கள் உட்பட பிரசாரம் செய்யவும் இரகசிய சுற்றுத்திரவுகள் பறந்து திண்ணைப் பிரசாரங்கள் நடந்து வருகின்றன. அதோடுமாத்திரமல்லாமல் தங்கள் சுயநலத்தை மனதில் வைத்து வெளிக்குப் பார்ப்பனல்லாதார்க்கு உழைப்பதாகவேஷம் போட்டுக்கொண்டு ஜஸ்டிஸ் கக்ஷியில் சேர்ந்து தங்கள் எண்ணம் ஈடேறாமல் ஏமாற்றமடைந்து வெளிவந்த சில பச்சோந்திகளும், இதற்குத் துணைபுரிந்து வருகிறார்கள் என்பதாகவும் தெரிய வருகிறது. யார் அப்படிக் கத்தினாலும் கத்தட்டும்; இதைப்பற்றிப் பொது ஜனங்களுக்கு ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லுவோம். இவர்கள் சொல்லுகிற மாதிரி பணம் சம்பாதிக்க வேண்டும் என்கிற ஆசை ஸ்ரீமான் பனகால் அரசருக்கோ ஸ்ரீமான் எ. ராமசாமி முதலியாருக்கோ இருக்குமானால் மலையாளக் குடிவார மசோதாவிலும் இந்துமத பரிபாலன மசோதாவிலும் எவ்வளவு லக்ஷ ரூபாய் சம்பாதித்திருக்கக்கூடும் என்பதைப் பகுத்தறிவைக்கொண்டு யோசித்துப் பார்த்தால் தெரியவரும். உபயோகமில்லாத வெறும் பார்ப்பனர்களுக்கு பல மடாதிபதிகளும் மகந்துக்களும் மலையாள ஜன்மிகளும் லக்ஷக் கணக்கான ரூபாய் செலவு செய்ததாகத் தெரிகிறது. இந்தப் பார்ப்பனர்களால் இந்தக் காரியமாகுமென்ற நம்பிக்கையே இல்லாமல் சூதாடுவதுபோல் இவ்வளவு பணம் செலவு செய்திருக்கிறார்கள். ஸ்ரீமான் பனகால் அரசரோ ஸ்ரீமான் ராமசாமி முதலியாரோ இந்துமத பரிபாலன சட்டத்தை முழுவதும் நிறுத்திக்கொள்ளத் தேவையில்லை; ஒரு கோவிலையும் நான்கு மடங்களையும் மாத்திரம் இச்சட்டத்திலிருந்து விலக்குவதானால் 7 லக்ஷ ரூபாய் கொடுக்க ஆள்கள் இன்றைய தினமும் தயாராயிருக்கிறார்கள் என்றும், இதை முடித்துக்கொடுக்கும் தரகருக்கும் பதினாயிரக் கணக்கான பொன்னும் பீதாம்பர சால்வையும், தயாராயிருக்கிறதென்றே நாம் கேள்விப்படுகிறோம். இதிலிருந்தே நூறு, இருநூறு, ஐந்நூறு, வீதம் சிறு சிறு பதவிகளுக்கு பணம் வாங்குவது என்பது உண்மையானால், இந்த லக்ஷக்கணக்கான ரூபாயை வேண்டாம் என்று சொல்லுவார்களா? என்பதைப் பொது ஜனங்கள் யோசித்துப் பார்க்கமாட்டார்களா என்கிற ஞானம்கூட இல்லாமலே இவ்வித இழிவான தன்மையில் பிரசாரங்கள் செய்கிறார்கள். அல்லாமலும் இவர்களுக்கு எதிரிடையாய் நிறுத்தப்பட்டிருக்கும் கனவான்களும், இவற்றையே வெளியில் பேசுகிறார்கள் என்றும் நமது காதுக்கு வந்துகொண்டிருக்கிறது. இதிலிருந்து நமது மக்கள் தெரிந்துகொள்ளவேண்டியது என்னவென்றால் நமது பார்ப்பனர்கள் தங்கள் சுயநலத்திற்காக எதையும் செய்ய அஞ்சமாட்டார்கள் என்பதுதான். ஜமீன்தாரர்கள் மத்தியிலும், செங்கல்பட்டு ஜில்லாவாசிகள் மத்தியிலும், தான் இவ்வித ஈனத்தனமான பிரசாரம் அதிகமாய் நடத்தப்பட்டு வருவதாகவே கேள்விப்படுகிறோம். பார்ப்பனரல்லாத மக்களுக்குள் கொஞ்சமாவது மூளை இருக்கிறது, பகுத்தறிவு இருக்கிறது, என்பது வெளியாக வேண்டுமானால், அது முக்கியமாய் செங்கல்பட்டு ஜில்லாவாசிகளிடம் இருந்துதான் பார்ப்பன ரல்லாதார் சமூகம் எதிர்பார்க்கிறதென்றே சொல்லுவோம். சென்னை சட்ட சபைக்கு ஸ்ரீமான் ராமசாமி முதலியார் வரக்கூடாது என்கிற எண்ணம் கொண்டே நமது பார்ப்பனர்கள் செங்கல்பட்டு ஜில்லாத்தொகுதிக்குத்தங்கள் சார்பாகப் பார்ப்பனரல்லாதாரையே நிறுத்தி அவருக்கு எதிராய்ப் போட்டி போடச்செய்து தாங்கள் தங்கள் பணத்தைக் கொண்டும், மகந்துக்கள் பணத்தைக் கொண்டும் பிரசாரம் செய்து வருகிறார்கள் சென்னை சட்ட சபையில் இப்பார்ப்பனர் போடும் கூச்சலுக்கும் அவர்கள் கிளப்பி விடும் விவகாரங்களுக்கும், சட்ட சம்பந்தமான சிக்கல்களுக்கும் அப்படித்த மாதிரி பதில் சொல்லி அவர்களை அடக்கிவைக்கத் தகுந்த சக்தி, ஸ்ரீமான் எ. ராமசாமி முதலியார் அவர்களிடம் இருப்பதினால் தான் நமது பார்ப்பனருக்கு அவர் எதிரியாய்த் தோன்றுகிறார். உதாரணமாக சென்னை சட்ட சபையில் கொஞ்ச நாளைக்குமுன் ஒரு பார்ப்பன சட்டசபை மெம்பர் ஒரு பார்ப்பனரல்லாத உத்தியோகஸ்தரைக் கெடுக்க எண்ணங் கொண்டு அவர்பேரில் ஒருபழியைச் சுமத்தி அதாவது குறிப்பிட்ட பார்ப்பனரல்லாத உத்தியோகஸ்தர் தேர்தல் விஷயத்தில் பிரவேசித்திருக்கிறார், அவரைப்பற்றி விசாரிக்க வேண்டும் ஆதலால் சபை நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும், என்று ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். இதைப்பற்றி பிரமாதமாய்ப் பேசி அந்த உத்தியோகஸ்தரைப் பற்றி கெட்ட அபிப்பிராயம் உண்டாகும்படி செய்தும் அவரை ஒழிக்க சட்ட மெம்பருக்கு அதிகாரம் கொடுக்கப்போகும் சமயத்தில் ஸ்ரீமான் எ. ராமசாமி முதலியார் சட்ட சபைக்கு வந்து விஷயம் இன்னதென்று தெரிந்ததும் உடனே ஆம் ஆம் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். இன்னும் இரண்டொரு உத்தியோகஸ்தர்களைப் பற்றியும் நான் கேள்விப்பட்டேன் அவரையும் அந்த லிஸ்டில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி ஒரு பார்ப்பன ஜில்லாகலெக்டர் பெயரையும் ஒரு பார்ப்பன சப் ஜட்ஜி பெயரையும் சூசனை காட்டினார். உடனே பார்ப்பன சட்ட மெம்பரே பார்ப்பன சட்டசபை மெம்பரை கெஞ்சிக் கேட்டுக்கொண்டு தன்னுடைய பிரேரபணையை வாபீசு வாங்கிக் கொள்ளவே வெகுபாடு படும்படி செய்து விட்டார். இம்மாதிரி அவர் ஒருவர் அங்கிருந்துகொண்டு பார்ப்பனரல்லாதார் விஷயத்திலும் பார்ப்பனரல்லாத உத்தியோகஸ்தர்

# பிராமணீயத்தை ஒழிப்பதென்றால் என்ன?

## கும்பகோணத்து "பிராமணனின்" லஜ்ஜையும் சீற்றமும்.

பிராமணீயத்தை ஒழிப்பது என்பதில் பார்ப்பனர்களை ஒழிப்பது என்பதும் அவர்களுக்குப் போகும் பிச்சைக்காசையும் பிச்சைச் சாமான்களையும் நிறுத்துவதும் என்பதே நமது கருத்து என்பதாகப் பலர் அபிப்பிராயப்படுவதாகக் கற்பனை செய்துகொண்டு பார்ப்பனரினால் வயிறு வளர்க்கும் சில பார்ப்பனரல்லாதாரும், சில பார்ப்பனரும், பார்ப்பனப் பத்திரிகைகளும், "பிராமணன்" என்கிற பார்ப்பன வருணாசிரம தர்ம பத்திரிகையும், கூச்சல் போடுகின்றதுகள். பிராமணீயத்தை ஒழிப்பது என்பதை நாம் எந்தக் கருத்தின் பேரில் தொடங்கினோம் என்றால் நம்மைவிட பார்ப்பனன் உயர்ந்தவன் என்று எண்ணுவதும், அவன் பிழைப்புக்காக ஏற்படுத்தி வைத்துக் கொண்டிருக்கும் வஞ்சக சாஸ்திரங்களையும் பொய்ச்சுருதிகளையும் புரட்டு ஆகமங்களையும், நம்புகிற மூடநம்பிக்கையையும், நமது மனதை விட்டு அகற்றுவதும், நம்மைவிடப் பஞ்சமன் என்பவன் தாழ்ந்தவன் என்று எண்ணுவதை ஒழிப்பதுமாகிய தத்துவத்தைத்தான் முதன்மையாகக் கருதித் தொடங்கினோமே யல்லாமல் வேறல்ல. உதாரணமாக பார்ப்பனனை நாம் ஏன் "சுவாமி" என்று கூப்பிடவேண்டும்? அவனைக் கண்டால் நாம்தான் முதலில் கும்பிடவேண்டும் என்கிற மனப்பான்மை நம்மிடத்தில் ஏன் இருக்கவேண்டும்? பார்ப்பனரும் ஏன் அதை எதிர்பார்க்கவேண்டும்? அவனுக்குப் பணம் கொடுப்பதும், சாப்பாடு போடுவதும், புண்ணியம் என்று ஏன் நாம் நினைக்கவேண்டும்? இதுபோன்ற பல உயர்வுகள் நம்போன்று நம்மிலும் பல வழிகளில் தாழ்ந்தவனாயிருக்கிறவனுக்கு பார்ப்பனனாகப் பிறந்தான் என்கிறகாரணத்திற்காக ஏன் கொடுக்கவேண்டும்? அல்லாமலும் நம்மைவிட எந்த விதத்திலும் தாழ்மையில்லாதவனையும் நம்மிலும் பல விதத்தில் உயர்குணங்கள் கொண்டவனையும் போலிப் பிறவிகாரணமாக நாம் ஏன் தாழ்ந்தவன் என்று சொல்லவேண்டும்? அவன் நம்மைக் கும்பிடும்படி ஏன் நாம் எதிர்பார்க்க வேண்டும்? ஒருவனை நாம் தொட்டால் தோஷம் என்று நாம் ஏன் நினைக்கவேண்டும்? ஆகிய இப்பேர்ப்பட்ட தான அஞ்ஞானத்தை, மூடநம்பிக்கையை, கொடுமையை, அகம்பாவத்தை, கொலைபாதகத்தை, வஞ்சகத் தத்துவத்தை, ஒழிப்பதல்லாமல் பிச்சை எடுக்கும் பார்ப்பனர் மேல் துவேஷங் கொண்டு செய்வதல்ல என்பதை உறுதியாய்த் தெரிவித்துக் கொள்ளுகிறோம். உதாரணமாக பார்ப்பனனுக்கு, பிச்சை கொடுப்பதை நாம் வேண்டாமென்று சொல்ல வரவில்லை. ஆனால் அவனுக்குக் கொடுப்பது புண்ணியம் மோக்ஷத்திற்கு கொடுக்கும் விலை என்கிற மூட நம்பிக்கையின் பேரில் கொடுத்து ஏமாறுகிறீர்கள் என்றுதான் சொல்லுகிறோம். கஞ்சிக்கில்லாமல் கஷ்டப்படுகிறான் பாடுபட்டுத் தின்பதற்கு யோக்கியதை இல்லா நிலையில் இருக்கிறான் என்று காணப்பட்டால் கண்டிப்பாய் அவனுக்கு உதவ வேண்டியது மனித தர்மமென்றே சொல்லுவோம். இந்தநிலை "பிராமணனிடம்" கண்டாலும் சரி "பஞ்சமனிடம்" கண்டாலும் சரி உடனே உதவ வேண்டியது மனிதனின் ஆண்மையிலும் சுயமரியாதையிலும் பட்டதென்று கூடச்சொல்லுவோம். உப்பற்ற கஞ்சிகண்டு கோள் ஆனமனிதன் தெருவில் உயிர்போகுந் தருவாயில் இருக்கும் போது "பாயாசத்திற்குக் குங்குமப்பூ போதவில்லை அக்காரவடிசிலுக்குப் பச்சைக்கற்பூரம் போதவில்லை என்ன சமாராதனை செய்துவிட்டான் லோபிப் பயல்" என்றுசொல்லுகிற காளைத்தடியர்களுக்குச் சாப்பாடு போடுவது தர்மம் என்று எண்ணுகிற முட்டாள்தனத்தை விடவேண்டும் என்பதையும் தான் பிராமணீயத்தில் இருந்து விடுபட்டதென்று சொல்லுகிறோம்.

பிராமணன் என்கிற ஒரு பத்திரிகை பஞ்சாங்கப் பிராமணர்களை உண்மை பிராமணர்கள் தாழ்வாய்க் கருதுவதாகவும், அவர்களுக்கு அவ்விழி தொழில் கூடாதென்றும், அவர்கள் வேறு தொழிலில் பிரவேசிக்க வேண்டுமென்றேதான் விரும்புவதாகவும், ஜம்பமாய் எழுதிவிட்டுப் பார்ப்பனர் "இவ்விழி தொழில்" செய்வதற்குப் பார்ப்பனரல்லாதார் காரணஸ்தராயிருக்கக்கூடாது என்றுகேட்டுக்கொள்ளும்தமிழ்நாடுபத்திரிகைமீது சீறி விழுவதன் காரணம் இன்னதென்றுதெரியவில்லை. • தவிர, பார்ப்பனர்களில் இவ்விழி தொழிலில் ஜீவித்து வருபவர்கள் பதினாயிரத்திலொருவர் கூட இல்லை என்றும், மற்றவர்கள் எல்லாம் கௌரவமான தொழிலில் வாழ்கிறார்கள் என்றும், ஜம்பம் பேசிக்கொள்ளுகிறது. ஆனால் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சாஸ்திரிகளோ ஏதோ பதினாயிரத்தில் ஒருவர்தான் உத்தியோகம் காப்பி ஓட்டல் முதலிய "இழி தொழில்களில் இருக்கிறார்கள் மற்றவர்கள் எல்லாம்" மகா பரிசுத்த பிராமணீயத் தொழிலாகிய பஞ்சாங்கத் தொழிலில் இருக்கிறார்கள்: அவர்களிடத்தில் பார்ப்பனரல்லாதாருக்குத் துவேஷம் ஏன் இருக்கவேண்டும்? என்று பேசியிருக்கிறார். ஆகலால் உத்தமமான தொழில் இன்னது இழிதொழில் இன்னது என்பதுகளிலேயே இவ்விரு பார்ப்பனர்களுக்கும் வித்தியாசமிருப்பதால் நாம் இதில் கலந்துகொள்ள இஷ்டமில்லை. ஆனாலும் பதினாயிரத்தில் ஒருவன்தான் பஞ்சாங்கப் பிராமணன் என்பதைமாத்திரம் நாம் மறுக்கிறோம். இன்றையதினம் உத்தியோக முறையில் உயர்ந்த ஸ்தானம் வகித்தும் மாதம் பதினாயிரம் இருபதினாயிரம் சம்பாதித்து வரும் பிராமணர்கள் என்று சொல்லிக்கொள்ளுபவரான ஸ்ரீமான்கள் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் நரசிம்மேஸ்வரசர்மா அவர்கள், சி.பி. ராமசாமி அய்யர் அவர்கள், எஸ். சீனிவாசயயங்கார் அவர்கள், டி. ஆர். வெங்கிட்டராம சாஸ்திரிகள், மகா மகா கனம் பட்டம் பெற்ற ஸ்ரீனிவாச சாஸ்திரிகள் சர். சிவசாமி அய்யர் அவர்கள் முதலியவர்கள் உட்பட அனேக சாதாரண உத்தியோகப் பிராமணர்களும், அரசியல் பிராமணர்களும், சன்னிதானங்கள், மடாதிபதிகள், மகந்துகள், என்று சொல்லத் தகுந்த பல வைதீகப் பிராமணர்களும், சிலர் பஞ்சாங்கப் பிராமணர்களின் சந்ததிகள் சிலர் பஞ்சாங்கப் பிராமணர்களின் பிள்ளைகள் பலர் பஞ்சாங்கப் பிராமணர்களின் சகோதரர்கள் பலர் உத்தியோகத்திலும் வைதீகத்திலும் பஞ்சாங்கத்திலுமாக மூன்றிலும் வயிறு வளர்க்கிறவர்கள் என்பதை மாத்திரம் தெரியப்படுத்திக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை "பிராமணன்" உண்மையிலேயே இந்த "இழிதொழிலாகிய" பஞ்சாங்கத் தொழிலைச்செய்வதிலிருந்தும் மூட நம்பிக்கையில் பார்ப்பனரல்லாத மக்களை இறக்கி அவர்களால் வயிறு வளர்க்கும் தொழிலிலிருந்தும் "பிராமணர்களை"க் கடைத்தேற்றி பிராமணன் சொல்லுகிறபடி அவர்களை "கௌரவமான" வாழ்க்கையில் நடக்கும்படி செய்யும் பிரசாரத்திற்கு நம்மையும் அழைத்தால் நாமும் ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறோம்.

நாம் பிராமணீயத்தை விட்டவர்கள் பெயர்களைப் போட்டுவருவது போலவே பஞ்சாங்கத் தொழிலாகிய "இழிதொழிலை விட்ட பிராமணர்" பெயர்களையும் வாராவாரம் பிராமணன் "பத்திரிகை" கொண்டு வெளிவருமானால் நாம் பிராமணனை மிகுதியும் போற்றுவோம். அதில்லாமல் எழுத்தில் மாத்திரம் காட்டுவதில் என்னபயன்? தாசிகளைக்கேட்டால்கூட அவர்கள் தங்கள் தொழில் இழி தொழிலென்று ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஆனால் இருட்டானவுடன் தெருவில் நடப்பவனைப்பார்த்து கண்ணடிப்பதில் பின்வாங்குவதில்லை வக்கீல்களும் அதுபோலவே தங்கள் தொழில் இழிதொழில் என்று ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஆனால் தாசிகள் புருஷர்களைத் தேடுவதுபோல் வாயிற்படியிலும் ரயில்வே பிளாட்பாரத்திலும் காத்திருந்து கட்சிக்காரர்களைத் தேடுவதில் குறைவில்லை அதுபோல் பிராமணனும் பஞ்சாங்கத்தொழில் இழிதொழில் என்று வாயில் ஒப்புக்கொண்டதைப் பற்றி நாம் மிகுதியும் சந்தோஷப் படமுடியவில்லை. அதை காரியத்தில் காட்டி தனது சமூகத்தாருக்கு அத்தொழில் இல்லாமல் செய்யப் பிரயத்தனப் படுவானானால் அந்தத் தொழிலின்பலனாய் மூட நம்பிக்கையில் ஈடுபட்டுச் சுயமரியாதை இன்றிக்கிடக்கும்கோடிக் கணக்கான பார்ப்பனரல்லாத மக்களுக்குச் சுயமரியாதைக்கு வழிகாட்டின பலன்பார்ப்பனர்களுக்கு கிடைக்குமென்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

---

விஷயத்திலும் எவ்வளவோ பாடுபட்டு வருவது பார்ப்பனர் கண்களில் ஊசி குத்துவது போல் இருப்பதால் அவருக்கு எதிரிடையாய் செங்கல்பட்டு ஜில்லா தொகுதி ஒரு பார்ப்பன ரல்லாதாரையே நிறுத்தி முன் சொன்னதுபோல் மாந்துக்கள் பணத்தை செலவு செய்து சில பார்ப்பனரல்லாதாரைக் கொண்டே பிரசாரம் செய்கிறார்கள். ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்காரும் தான் தூங்கும்போதும் சாப்பிடும்போதும் மற்றும் ஒவ்வொரு சமயத்திலும் ஸ்ரீமான் எ. ராமசாமி முதலியார் உருவமே தம்முன் தோன்றுவதாகவும் அவரை ஒழிப்பதே தமது வெற்றி என்றும் அந்த விஷயத்திலேயே தமது முழு கவனத்தையும் பலத்தையும் செலுத்தப் போவதாகவும் சொல்லியிருக்கிறார். இதற்காகவே இஜ்ஜில்லா மிராசுதாரர்களையும் ஜமீன்தாரர்களையும் சுவாதீனப்படுத்திக்கொண்டு உள்நாட்டு சண்டைகளையும் கக்ஷிகளையும் கிளப்பிவிட்டுக் கொண்டும் வருகிறார். ஆதலால் செங்கல்பட்டு ஜில்லா வாசிகள் இந்த சமயம் தங்கள் புத்திகளையும் மனச் சாக்ஷிகளையும் பார்ப்பனர்சூழ்ச்சிக்கும் தந்திரத்திற்கும் பலிகொடுத்து விடாமல் நமது நாட்டு நிலைமையும் நமது பார்ப்பனரல்லாதார் வகுப்பு நிலைமையையும் கவனித்து புத்திசாலித்தனமாய் நடந்துகொள்ள வேண்டுகிறோம். செங்கல்பட்டு ஜில்லா ஜமீன்தாரர்கள் தங்களை எவ்வளவு பெரிய ஜாதியார் என்று சொல்லிக்கொண்டாலும் தாங்கள் எவ்வளவு பெரிய வர்ணாசிரம தர்மி என்று சொல்லிக்கொண்டாலும், பார்ப்பனர் அகராதியில் அவர்களை சூத்திரர்கள் என்றுதான் குறிக்கப் பட்டிருக்கிறதே அல்லாமல், ஜமீன்தார்கள் வேறு பிறவி என்று இல்லவே இல்லை. ஆகையால் உள்நாட்டு கட்சி விவகாரத்தின் பலனாய் பார்ப்பனர்களின் கையாளாயிருக்கக் கூடாது என்று ஜமீன்தாரர்களையும் மிராசுதாரர்களையும் மறுமுறை வேண்டிக் கொள்ளுகிறோம்.

7ம் பக்கத் தொடர்ச்சி.

னத்துடன் விவகரிக்கவும், எதிரிகளின் சூழ்ச்சியை அறியவும் தக்க யோக்கியதை உடையவர்கள் எந்த வகுப்பிலிருக்கின்றார்கள் என்றால், பார்ப்பனரல்லாதார் வகுப்பில் தான் இருக்கிறார்கள் அவர்களில் சிறந்தவர்கள் என்று சொல்லத் தக்கவர்கள் யார் என்று பார்த்தால் நமது ஸ்ரீமான்கள் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்களையும் சென்னை ஸ்ரீமான் ஏ. ராமசாமி முதலியார் அவர்களையுமே சொல்லவேண்டும். அப்படிப்பட்ட இருவரும் பிரகாசிக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்னவென்று யோசித்தால் நமது பார்ப்பனப் பத்திரிகைகளின் விஷமமேயல்லாமல் வேறல்ல. எத்தனையோ "ஆகாவழிகள்" பார்ப்பனர் என்கிற காரணத்திற்காக "தலைவர்களாய்" பிரகாசிக்கிறார்கள். இதன் காரணம் என்னவென்றால் இப்படிப்பட்டவர்கள் பார்ப்பனர் என்பதற்காகத்தான். உதாரணமாய் சுயராஜ்யக் கட்சித் தலைவர், தமிழ் நாட்டுத் தலைவர், காங்கிரஸ் தலைவர், என்று விளம்பரம் பெறும் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் இக்கனவான்களின் அறிவிற்கும் ஆற்றலுக்கும் ஒத்துப்பார்த்தால் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது என்பதைக் காணலாம். ஸ்ரீமான் அய்யங்கார் சட்ட ஞானத்தில் நிபுணராயிருக்கலாம்; அதுபோலவே மற்றொருவர் சித்திரமெழுதும் ஞானத்தில் நிபுணராயிருக்கலாம்; மற்றொருவர் கவி பாடுவதில் நிபுணராயிருக்கலாம்; மற்றொருவர் செருப்புத் தைப்பதில் நிபுணராயிருக்கலாம்; இம்மாதிரி பல கலைஞானங்களுக்கு நிபுணராயிருப்பதற்கும் உலக ஞான அறிவுக்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு. இக்கலை "நிபுணத்வம்" கூட சூழ்ச்சியினால் பெற்றுவிடலாம். இதைப்பற்றி மற்றொரு சமயம் விரிக்கலாம். நிற்க, ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் இந்த சமயத்தில் தானா, ஆஸ்திரேலியாவுக்குப் போகத் துணிந்தது என்று நாம யோசிக்கும்போது, அவரது ஊக்கத்தையும், தேசாபிமானத்தையும், உறுதியையும், யாரும் போற்றாமலிருக்கமுடியாது. ஏனெனில் ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் அடுத்து நடக்கப்போகும் இந்தியா சட்டசபைத் தேர்தலில் ஒரு அபேக்ஷகராய் கோயமுத்தூர், நீலகிரி, சேலம், வட ஆற்காடு ஆகிய நான்கு ஜில்லாக்களின் சார்பாய் நிற்கிறார். இவருக்கு எதிராகப் பலர் நிற்கிறார்கள். இனியும் நிற்க நினைப்பார்கள். ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் தேர்தலுக்கு முன் திரும்பிவரவும் முடியாது. அப்படி இருந்தும் தேர்தலைக்கூட அவ்வளவு லட்சியம் செய்யாமல் போகத் துணிந்தது நாம் மிகுதியும் பாராட்டத்தக்கதுதான். செட்டியார் அவர்கள் அரசியல் அபிப்பிராயத்தில் பார்ப்பனக் கட்சியான சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்திருந்தாலும் மற்றும் எல்லாக் கட்சியாரின் நம்பிக்கையையும் பெற்றிருக்கிறார் என்றே சொல்வதோடு முழுதும் பார்ப்பனர்கை ஆயுதமாக இல்லை என்றே சொல்லவேண்டும். தற்காலம் நமது நாட்டில் பெருத்தப் பல கட்சிகள் இருந்தாலும், அதைப் பாகுபடுத்தினால், இரண்டு கட்சிகள்தான் விளங்கும். ஒன்று பார்ப்பனர் கட்சி, மற்றொன்று பார்ப்பனரல்லாத கட்சி. இரண்டு கட்சியிலும் சுயநலக்காரர் இருந்தாலும் அபிப்பிராயம் இரண்டுதான். அதில் பார்ப்பன ஆதிக்க அபிப்பிராயம்-பார்ப்பனரல்லாதார் ஆதிக்க அபிப்பிராயம் இரண்டுதான். இவற்றிற்கு ஆதாரம் விவாதத்திலிருப்பதும் இரண்டுதான்; அரசியலில், அதாவது ஒன்று பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் என்கிற வகுப்புவாரி வாக்காளர் உரிமை கொண்ட வகுப்புவாரி பிரதிநிதித்துவமும், சமூக வியலில் மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு உண்டு என்கிற வித்தியாசத்தை ஒழிப்பதற்கு அஸ்திவாரமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்து மத தர்ம பரிபாலன சட்டமும்தான்; இவ்விரண்டையும் நிறைவேற்ற பார்ப்பனரல்லாதாரும், இவ்விரண்டையும் அழிக்கப் பார்ப்பனர்களும், போடும் சண்டைதான் இப்போது பல கட்சிகளாய் விளங்குகிறது. ஆனபோதிலும் இவ்விரு தத்துவங்களையும் நிறைவேற்றவும், அழிக்கவும், இரு கட்சியாரும் மற்ற கட்சிகளிலிருந்து ஆசாமிகளை பலவித சூழ்ச்சிகளினாலும் கூடா ஒழுக்கத்தினாலும், சுவாதீனப் படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறைக்க முடியாது. ஆனாலும் நமது செட்டியார் அவர்கள் இவ்விரு அபிப்பிராயங்களிலும் தனது மனச் சாக்ஷியில் ஒரு கடுகத்தனையாவது பார்ப்பனருக்கு விற்காமல், பார்ப்பனர் கட்சியாய சுயராஜ்ய கட்சியில் இருக்கிறார் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. உதாரணமாக காஞ்சிபுரம் அரசியல் மகாநாட்டின் போது ஸ்ரீமான் டி. ஏ. ராமலிங்கஞ் செட்டியார் அவர்களின் தலைமையின்கீழ் கூடிய எல்லாக் கட்சி பார்ப்பனரல்லாதார் மகாநாட்டில் ஸ்ரீமான் இராமசாமி நாயக்கராலும் ஸ்ரீமான் எஸ். ராமநாதன் அவர்களாலும் பிரேரேபித்து ஆமோதிக்க ஏற்படுத்திய வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்தீர்மானத்தைத் தயார் செய்தவரே ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள்தான் இரண்டாவதான இந்து மத பரிபாலன சட்டத்தைப்பற்றி நமது பார்ப்பனர்கள் சுயராஜ்யக் கட்சி என்பது பார்ப்பனக் கட்சிதான் என்பதை உலகத்தார் உணர்வதற்கு அனுகூலமாய் அடுத்த சட்ட சபையில் வரப்போகும் இந்துமத பரிபாலன மசோதாவைச் சுயராஜ்யக் கட்சியார் (பார்ப்பனருக்காக) எதிர்க்கவேண்டும். வெளிப்போன வீரர்கள் சட்டதிட்டங்களை மீறிக்கூட உள்ளே போகவேண்டும் என்று பார்ப்பனர் அறிக்கையிட்டிருந்தும், நமது ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் ஒருவர் மாத்திரம்தான் தைரியமாய் வெளியில் வந்து இந்து மத பரிபாலன சட்ட விஷயம் அரசியல் விஷயம் அல்ல; அது பிராமணர் பிராமண அல்லாதார் என்கிற வகுப்பு விஷயம்; ஆதலால் இதை ஆதரிப்பவர்களோ, எதிர்ப்பவர்களோ தனி மேஜாவில் வந்து முறையில் எதிர்க்கலாமே ஒழிய அரசியல் தத்துவ முறையில் எதிர்க்கக்கூடாது; அப்படி எதிர்த்தால், தான், சுயராஜ்யக் கட்சியையும் காங்கிரசையும் கூட விட்டு வெளியேறவேண்டியிருக்கும் என்று பார்ப்பனர் நடுக்கிடும்படியும் தான் பார்ப்பனர் அடிமை அல்ல என்பதை மக்கள் உணரும்படியும், இறுதிக் கடிதம் வெளியிட்டார். இதிலிருந்து வேறு எந்தக் காரியங்களுக்கென்று ! ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் எந்தக் கட்சியில் இருந்தபோதிலும் நாட்டின் நலத்திற்கும் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைக்கும் சமத்துவத்திற்கும் ஏற்படும்பிரசினைகளில் தனது ரத்தம் பார்ப்பனரல்லாதார் ரத்தம் என்பதையும் தான் பரிசுத்தமான பார்ப்பனரல்லாதார் சந்ததி என்பதையும் தாராளமாய்க் காட்டிக்கொண்டார் இதை உத்தேசித்தே பார்ப்பனர் அல்லாதார் கட்சியாகிய "ஜஸ்டிஸ்" கட்சி சார்பாய் நின்றிருந்த ஸ்ரீமான் எம். சம்பந்த முதலியாரவர்களும் ஸ்ரீமான் செட்டியாருக்குப் போட்டியாய் நிற்பதிலிருந்து விலகிக்கொண்டு செட்டியாருக்கு உறுதி கொடுத்து, வழிவிட்டிருக்கிறார். அக்கட்சியாரும் இனி வேறு யாரையும் செட்டியாருக்குப் போட்டியாய் நிறுத்தமாட்டார்கள் என்றே நினைக்கிறோம். சுயராஜ்யக் கட்சிப்பார்ப்பனரும் ஸ்ரீமான் செட்டியாருக்குப் போட்டியாய் யாரையும் நிறுத்தமாட்டார்கள் என்றே தோன்றுகிறது. ஆனால் சென்னை சட்டசபைக்கு நிற்கும் சுயராஜ்யக் கட்சி கனவான்களில் இரண்டொருவர்களுக்குச் சென்னை சட்ட சபை ஸ்தானம் கிடைப்பது சந்தேகம் என்று பட்டால் மாத்திரம் கட்சிப்பெயர்களை விட்டு விலகி சுயேச்சை வாதியாக நிற்பார்கள் என்று பலரால் ஊகிக்கப்படுகிறது. ஆனபோதிலும் ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் இந்த நான்கு ஜில்லா வாசிகளான ஓட்டரிடத்தில் உறுதிவைத்தே, தான் போன சமயம் பார்த்துத், தான், இந் நாட்டிலில்லாத அந்த விஷயத்தை, உபயோகப்படுத்திக்கொண்டு, "இந்த ஸ்தானத்துக்கு நிற்பார்களானால், அவர்களுக்கு ஷை ஓட்டர்கள் தகுந்த புத்தி கற்பிப்பாரென்றே நம்பி தனது பிரயாணத்தை உறுதி செய்துகொண்டு புறப்பட்டு விட்டார்.

ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் ஆஸ்திரேலியாவுக்குப் போய் வருவதினாலாவது, இந்தியா சட்டசபைஸ்தானத்திற்குப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்படுவதினாலாவது தேசத்திற்குப் பிரமாதமான நன்மை ஏற்பட்டுவிடுமென்றாவது, சுயராஜ்யம் கிடைத்துவிடுமென்றாவது நாம் ஒரு சிறிதும் நம்பி, செட்டியார் அவர்களை வெற்றிபெற ஆசீர்வதிக்கவில்லை. ஆனால் செட்டியார் போன்றவர்கள் பார்ப்பனரைப் போலவே காங்கிரஸ் பெயரையும் சுயராஜ்யக்கட்சிப் பெயரையும் சொல்லிக்கொண்டாலும் சர்க்கார் பதவிகளுக்கும் உத்தியோகங்களுக்கும் அதாவது ஜட்ஜுகளாகவோ சட்டமெம்பர்களாகவோ, அட்வொகேட் ஜெனரலாகவோ வருவாரானால், பார்ப்பனரல்லாத மக்கள் சுயமரியாதையை ஒழிக்கத் தெருவில் நடக்கவேண்டாம் என்றும், கோவிலுக்குள் போகவேண்டாம் என்றும், சட்டப்படி குற்றம் என்றும், வகுப்புத்துவேஷத்தைக் கிளப்பியதால் பிடித்து ஜெயிலில் போடு என்றும் அட்வொகேட் ஜனரலும் சட்ட மெம்பரும் ஏன் சட்டப்படி ஸ்ரீமான்கள் ராமசாமி நாயக்கர் மீதும் ஆரியா மீதும் கனம் மந்திரியாதவர் மீதும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லையென்றும், கேட்கவாவது, சுயமரியாதையின் எதிரிகளான நமது பார்ப்பனர்களுக்கு தைரியமில்லாமலிருக்கத் தகுந்த அளவுக்காவது பிரயோஜனப்படாதா? என்கிற ஆசையின் பேரிலேயே செட்டியார் போன்ற மனப்பான்மை உள்ளவர்களை நாம் ஆதரிக்கிறோம்.

ரோஜா முத்தையா

## தமிழர் பெருமான்களே! வாக்காளர்களே!! ஜாக்கிரதை! ஜாக்கிரதை!!

தாணியோர் போற்றும் தமிழர் பெருமக்களே! தயாள மூர்த்திகளே! நந் தாய்த் திருநாட்டின்கண் நந்தண்டமிழ்நாடு சம்பந்தப்பட்ட வரையும், இன்று தலைகால் தெரியாது தலைவிரித்தாடும் தான்தோன்றிகளை நினைக்கையில், நெஞ்சு குமுறுகிறது. என்னே, "காலத்தின் கோலம்! அம்மம்மா! அதிலும் சென்னைச் சேரியினின்று பழி பாவத்திற்கஞ்சாப் பார்ப்பனஉபாத்திகளால் அரசியல் ஞானம் பெற்று, தேச பக்தர்கள் என்ற நாமம் ஏற்று வெளிக்கிளம்பும் ஓட்டை, ஒடசல், ஓத்தக்காசு, செல்லாக்காசு, செம்பு, பித்தளைகள், நாவலர், பாவலர், மயிலை மரத்தினங்கள் போன்ற பார்ப்பனப் பாதம் வருடிகளின் செய்கையையும், பேச்சையும் சிந்தித்துருகா நிற்கும் தமிழர் காண்டலரிதன்றோ? "மயிர் நீப்பின் வாழாக் கவரிமானன்னார் உயிர்நீப்பர் மானம்வரின்" என்ற வள்ளுவ வள்ளலாரின் பேருரையைக் கண்டும் கேட்டுமறியா நங்கோடாரிக் காம்புகள், நந் தமிழர் குழாங்களைப் பார்ப்பன பைசாசுக் கிரையாக்கி விபீஷண வாழ்க்கை நடாத்தப் புகுவதிலும் இறப்பது மேலன்றோ? அந்தோ! இப்பூத கணங்கள் சாவதற்குச் சாண்கயிறு பஞ்சமோ, சமுத்திரம் தூரமோ, என் செய்வர்; சுயமரியாதை சற்றுமில்லா அன்னக்காவடிகள்.

தயாள மூர்த்திகளாம் நந் தமிழர்களே! சுயராஜ்யக் கட்சி பார்ப்பனர்க்கன்றி ஏனையோர்க் கெமன் என்பதையும், அப் பார்ப்பனக் கட்சியால் நாட்டுக்கோர் சிறிது நலனும் விளையாதென்பதையும், நமதருமந்த 'குடி அரசும்' அவ் வரசின் அதிபர் பெருமானும் திருவாளர் ராமசாமி நாயக்கரவர்களாலும் வெகு அழுத்தந் திருத்தமாய் கண்டிக்கப்பட்டு வருகிறதை உலகறியும். உண்மை எடுத்தோதி நந் தமிழர் உய்யும் வழி கோலிய பெருந்தகையாம் நங்குணமலை குடி அரசையும் அவ்வரசின் ஆசிரியப் பெரியாரையும் வசை மொழிகளால் அலங்கரித்துக் 'கண்டதே காட்சி கொண்டதே கோலமெனத்' திரியும் பார்ப்பனர்களும் அவர்தம் அடி வருடித் திரியும் நஞ் சோற்றுத் துருத்திகளாம் அன்னக்காவடிகளும், நந் தம் முன்னையாரின் சிட்சிப்புக்களாகாது, தப்பார்! தப்பார்!! முக்காலுந் தப்பார்!!!

அமிழ்தினுமினிய தமிழன்னையின் தவப்புதல்வர்களே! பார்ப்பனராதிக்கத்தை நிலைநாட்ட அவதரித்துள்ள சுயராஜ்யக் கட்சியினர், நாங்கள் காந்தி சீடர்கள், காங்கிரஸ்வாதிகள் எங்களுக்குங்கள் வாக்கைக் கொடுங்கள், சட்ட சபை சென்று வானை வில்லாக்கிடுவோம், சுயராஜ்யம் வாங்கி நுங்கள் தலைமேல் சுமத்தி விடுவோம், என ஒன்றைப் பத்தாக்கி, ஈரைப் பேனாக்கி, பேனைப் பெருமாளாக்கி உண்மைக்குச் சற்றும் ஒவ்வாத பொய்ப் புழுகு பித்தலாட்ட மூட்டைகளை நந் தமிழர் மத்தியில் கொஞ்சமும் நெஞ்சஞ்சாது வாய்குழறாது ஊத்தை வாய் திறந்து உழறிக் கொட்டுவதைக் காணும் வேசியுங் காறியுமிழ்வாளெனின் ஏனையோர் மதிக்கும் மாண்பை யானுரைதலும் வேண்டுமோ? மேலும் சகோதரர்களே, பெரியோர்களே; நாட்டின் நலங்காணுவான் சட்டசபை சென்றங்கு மயிரைக் கயிறாக்குவோம் எனச் செப்பும் சென்னைச் சேரியின் சுயராஜ்யக் கட்சியினரின் வள்ளலைத் தெள்ளறிவுகொண்டு சிந்திக்கின் 'சித்த சுவாதீனமில்லாதார் வதியும் பயித்தியகார ஆஸ்பத்திரிக்கே' அனுப்புதல் வேண்டுமென்ற முடிவே கொள்வீர்கள். உதாரணமாக நமதருமந்த தமிழ் தாதாக்களால் மக்களின் அறநெறி வளர்ச்சிக்கெனக் கோலிய கோவில்மடங்கள் போன்ற அற நிலையங்களின்றெண்ணில்லையுற்றிருக்கின்றன. அந்தோ! பரிதாபம், யோகத்தை வெறுத்து போகத்தை விரும்பும் விலங்கினங்களும், ஞானத்துறை விடுத்து ஊனத்துறை அடுத்துழலும் மிருகங்களுமெனத்தகும் அக்கிரமமே உருவெடுத்த மடாதிபதிகள் வயப்பட்டு அறநிலையங்கள் மற நிலையங்களாயும், வேசியில்லங்களாயும், கொலைக் களங்களாயும் நின்றிலங்கி வருவதோடின்றி அவ்வக்கிரமிகளாம் மடாதிபதிகளின் மட்டிலா அட்டூழியத்தால் நம்மாபினராம் தமிழர் பெருமக்களால் பெருகியும் உதவப்பட்ட மானியம் போன்ற மாபெரும் நிதியங்கள், உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி நடைப் பிணங்களென ஏங்கி நிற்கும் ஏழை மக்களுக்கு ஒரு சிறிதும் உதவப் பெறாமல், வழக்கு, வம்பு எனும் பேய்க்கும் அப்பேயை அண்டிப் பிழைக்க அண்ணாந்து நிற்கும் வழக்கறிஞர்கள் எனும் பகற் கொள்ளைக் கூட்டத்தார்க்கும், இரையாகி வருவதையும் இவ்வம்பர் குழாங்களால் மதத்திற்கே மான ஹானியும் ஏற்பட்டு வருவதையுங்கண்ட நம் பார்ப்பனரல்லாத தலைவர்களிற் பலர் ஒன்று சேர்ந்து, ஒன்றுமே செய்ய இயலாத சட்ட சபைகளில் பல பார்ப்பனரின் எதிர்ப்புக்கிடையில், நம் மூதாதைகளின் கருத்துக்கொப்பச் சீர் குலைந்துழலும் அற நிலையங்களைச் சீர் திருத்தி மக்களின் தூய்மை வாழ்க்கைக்கில்லமாயமைக்க, தேவஸ்தான மசோதா என்னும் சீரிய சட்டமொன்றாக்கினரன்றோ. அன்றி காந்தியடிகள் அல்லாது நாட்டுக்கு கதிமோட்சமில்லை. அப் பெரியார் தலைமை ஏற்கும் நன்னாளை விரைவில் கொடுத்தருள எல்லாம் வல்ல பாரதத் தாயை நோக்கி தவங்கிடப்பதோடின்றி சமர்பதி சத்தியவந்தர் தலைமைஏற்று நடாத்தும் சாம்ராஜ்ய திட்டத்திற்கு பெருந் தடைக்கல்லாய் நின்றிலங்குவதும் அன்றும் இன்றும் என்றும் நம் பழம்பெருநாட்டை அடிமைக் குழியில் வீழ்த்தியதும், வீழ்த்தி வருவதும் வீழ்த்தப்போவதுமாகிய பார்ப்பனீயத்தை வேரறக் கல்வது நங் கடமையிலுங் கடமை; மாபெருங் கடமை யாதலால் தேனினுமினிய செந்தமிழ் நாட்டுப் பெரியோர்களே! வாக்காளர்களே! வரப்போகும் தேர்தலில் தேசம், சுயராஜ்யம். காங்கிரஸ் எனக் கத்தி நாட்டை அவதிக் காளாக்கி வரும் பார்ப்பனரின் பசப்புரைக் காளாகி விடாது சுய மரியாதையுள்ள தமிழர் பெருமான்களுக்கே நுங்கள் வாக்கைக் கொடுத்து பார்ப்பனீயத்தை பகலவனைக் கண்ட பனி என, நம் நாட்டை விட்டு பறக்கச் செய்ய நுங்கள் அடிபணிந்து வேண்டுகிறேன். எச்சரிக்கை! எச்சரிக்கை!! பார்ப்பனீயப் படுகுழி, எச்சரிக்கை!!!

இப்படிக்கு,
ரா. க. பெருமாள், தூத்துக்குடி.

## விதவா விவாகம். விதவை வேண்டும்.

கனவான்களே! பெரியோர்களே!! நான் ஒரு சைவ வேளாளன். என் சொந்த ஊர் தூத்துக்குடி. தற்சமயம் திருவிதாங்கூரில் ஆரியங்காவு என்னுமிடத்தில் ரயில்வேஸ்டேஷனை அடுத்து கிளப் ஏற்படுத்தி ஒழுங்காக நடத்தி வருகிறேன். எனக்கு வயது 35 என்னுடைய 20வது வயதில் என் பெரியோர்களால் எனக்கு விவாகம் செய்து வைக்கப்பட்டது என் தர்ம பத்தினி என்னோடு வாழ்ந்திருந்து ஓர் ஆண் மகவைத் தந்து விட்டு அரனடி சேர்ந்தனள்.

அது சமயம் என் பந்துக்கள் என்னை மறு விவாகம் செய்து கொள்ளும்படி தூண்டினர். பெண்ணை இழந்த நான் புருஷனையிழந்த ஓர் பெண்ணையே மணக்க வேண்டுமென்று இது வரை மௌனம் சாதித்து விட்டேன். என் உள்ளக்கிடக்கையை வெளியிட இதுவே ஏற்ற சமயமென்று இப் பத்திரிகை மூலம் வெளியிடலானேன். நம் தேசம் நன்னிலைமைக்கு வரவும் என் எண்ணம் ஈடேறவும் என் சகோதரர்களும் பெரியோர்களும் ஆசார சீர்திருத்தக்காரர்களும் எனக்கு வேண்டிய ஒத்தாசை செய்யுமாறு மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனவான்களே 25 வயதுக்கு மேல் போகாத விதவையாகவும், குழந்தையில்லாதவராயும், எழுதப் படிக்கத் தெரிந்தவராயும் தேசிய ஞானமுள்ளவராயும், ஜீவகாருண்யமுள்ளவராயும், மறுவிவாகம் செய்து கொள்ள வேண்டுமென்ற எண்ணமுடையவராயுமிருத்தல் வேண்டும். அவருடைய தாய் தகப்பன் சம்மதித்து, பெரியோர்கள் முன்னிலையில் அக்கினி சாக்ஷியாக விவாகம் செய்து கொடுத்தால் ஒப்புக் கொள்ளத் தயாராகவிருக்கிறேன்.

மேற் கண்டபடி ஒரு விதவை இருந்து மறு விவாகம் செய்து கொள்ள சம்மதிக்கும் பக்ஷத்தில் "குடி அரசு" பத்திராதிபருக்காவது கீழ்க்காணும் என் விலாசத்திற்காவது தெரியப்படுத்தினால் மேல் நடக்கும் காரியங்களுக்கு வேண்டும் ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

எல்லாம் வல்ல இறைவன் என் எண்ணம் ஈடேறக் கிருபைபாலிப்பாராக.

எஸ். சுடலைமுத்து பிள்ளை,
காரியதரிசி,
காந்தி சமாஜம்,
ஆரியங்காவு,
செங்கோட்டை, திருவிதாங்கூர்.

# சைவத் திருமுறை பன்னிரண்டு.

(அழகிய திருவுருவப் படங்களுடன்)

—————o—————

இது திருமுறை ஆராய்ச்சியில் வல்ல
கயப்பாக்கம் சதாசிவ செட்டியாரவர்களால்
பார்வையிடப்பெற்று

ஆறு பகுதிகளாக டெம்மி 8-பக்க அளவில் பதிக்கப்பெறுகின்றது.

இப் பதிப்பின்கண்

பதிகக் குறிப்பு, அருஞ்சொற் கோவை, அருந்சொற் றொடர்க்கோவை, நூல் வரலாறு, ஆசிரியர் வாலாறு, பண் அட்டவணை, தல அட்டவணை, நாடுகளின் அட்டவணை, பண் விளக்க முதலியன (பல தலைப்புக்களில்) பாட்டு முதற்குறிப்பகராதி, ஆசிரியர் திருவுருவப் படங்கள், அற்புதப் படங்கள் முதலியன திருமுறை யாராய்ச்சியாளர்க்குப் பெரிதும் பயன் தரத்தக்க முறையில் எழுதிச் சேர்க்கப் பெறுகின்றன. சிறிது தமிழ் கற்றாரும் எளிதில் படித்துணருமாறு செய்யுட்கள் பண்ணிற் கேற்பச் சீர் பிரிக்கப் பெற்றிருக்கின்றன.

## 10—10—26-க்குள் முன்பண மனுப்புவோருக்கு விலை.

| பகுதி. | திருமுறை. | | காலிகோ கட்டடம். | ரெக்சின் அல்லது பட்டுக்கட்டடம். |
|---|---|---|---|---|
| 1 | 1—3 | சம்பந்தர் தேவாரம் (1 பகுதி) | ரூ. 5—0—0 | ரூ. 5—8—0 |
| 1—3 | 1—7 | சம்பந்தர், அப்பர், சுந்தரர் தேவாரம் (3 பகுதிகள்) | ரூ 13-0—0 | ரூ 14-3—0 |
| 1—6 | 1-12 | தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினோராந் திருமுறை, பெரிய புராணம் (6 பகுதிகள்) | 24-0—0 | ரூ. 27-0—0 |

குறிப்பு:—முதல் மூன்று திருமுறை (சம்பந்தர் தேவாரம்) பதிக்கப்பெற்று வருகின்றது. 15—11—26-ல் தவறாமல் வெளிவரும். மற்றைத் திருமுறைகளும் தொடர்பாய் வெளிவரும். 10—10—26-க்குள் முன் பணம் அனுப்பாதவர்க்கு 100-க்கு 25 வீதம் விலை கூட்டப்பெறும். யாதொரு பதிப்பும் ஒன்றிரண்டு ஆண்டுகளாகக் கிடைக்கப்பெறாமையாலும் சொற்பப் பிரதிகளே அச்சிடுகின்றமையாலும் விரைந்து முன் பண மனுப்புதல் நலம்.

### திருவிளையாடல் உரை வெளியீடு.

ஆடித் திங்கள் முதல் திங்கள் 1-க்கு 2 பகுதிகள் வீதம் காலந் தவறாமல் வெளிவந்து கொண்டிருப்பது தமிழுலகு அறிந்ததே. 5 திங்களில்புத்தகம் முடிவுபெறும்.

திருமுறை விளம்பரமும் புத்தக விலைப்பட்டியும் இனாம்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் (லிமிடெட்,)
306, லிங்க செட்டித் தெரு. சென்னை.


## நிருப நேயர்களுக்கு விண்ணப்பம்.

"குடி அரசு" மிகச் சிறிய பத்திரிகை. அது ஒரு குறிப்பிட்ட கொள்கையைப் பிரசாரம் செய்வதற்காக ஏற்பட்டது. கொள்கையைச் சரியானபடி விளக்குவதற்கே அதில் இடம் கிடைப்பது அருமையாயிருக்கிறது. இப்படியிருக்க தினசரிபத்திரிகைகளுக்கு நிருபங்கள் அனுப்புவதுபோல் பக்கம் பக்கமாய் எழுதியனுப்பிக்கொண்டு வந்தால் நமக்கு அதிக சங்கடமாக இருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொளளுகிறோம். நமது கொள்கையை ஒட்டிச் சுருக்கமாகவரும் வியாசங்களுக்குக் கூடுமானவரை இடம் தருவதுடன் அவற்றை மனப்பூர்வமாய் வரவேற்கிறோம். மற்ற விபரங்களுக்கு இடம் ஒதுக்கமுடியாமைக்கு வருந்துவதுடன் நிருப நேயர்களை மன்னிக்குமாறுபிரார்த்திக்கிறோம்.

பத்திராதிபர்.

## தஞ்சை ஜில்லா செங்குந்த முதலியார் முதலாவது மஹா நாடு,

நாகபட்டினத்தைச் சார்ந்த சிக்கல் பொருள் வைத்த சேரியில் நாளிது அட்சய ஆண்டு புரட்டாசித் திங்கள் 16௳, 17௳ [2-10-26, 3-10-26 சனி ஞாயிறு] நாகபட்டணம் பிரபல மிராசுதாரும் முனிசிப்ல்கவுன்சிலருமான திருவாளர் கே. நல்லமுத்து முதலியாரவர்கள் தலைமையின் கீழ் நடைபெறுமென்று செங்குந்தமஹாஜன சபைத்தலைவர் நமசிவாயமுதலியார் அறிவிக்கிறார்.

## கள்ளர் சங்கம் நாகப்பட்டணம்.

10-9-26 வெள்ளிக்கிழமை மாலை 6மணிக்கு நாகபட்டினம் நெல்லுக் கடை மாரியம்மன் கோவிலில் வடக்கு வீதியிலுள்ள சங்கக்கட்டிடத்தில் கள்ளர் ஜன பொதுக் கூட்டம் ஒன்று நாகை நீலலோசனி பத்திரிகை ஆசிரியரும் தமிழ்ப் பண்டிதருமான திரு. ஜி. சதாசிவ விஞ்நோயர் அவர்கள் தலைமையில் கூடி அடியிற்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப் பட்டன.

1. மகா நாட்டை அக்டோபர் மாதம் 9, 10௳ சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நாகப்பட்டணத்தில் நடத்துவது

2. மகா நாட்டுக்குத் தலைமை வகிக்கப் பாப்பா நாடு இளைய ஜமீன்தாரரும் தஞ்சை முனிசிபல் சேர்மனுமாகிய திரு. ராஜப்பா M. L. C. அவர்களை தேர்ந்தெடுக்கப்பட்டது.

3. மகா நாட்டிற்குப் பணம் மிகவும் அவசியமானபடியால் நமது மேன்பார்வை சபையார் நமது குல அபிமானிகளிடம் பண வசூல் செய்யும்படி அக்கூட்டம் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறது.

4. மஹா நாடு கடைசிவரை நடக்க வேண்டிய ஊக்கத்துடன் வேலை செய்ய கள்ளர் சங்கத் தொண்டர்களை வேண்டிக்கொள்வதோடு அவர்களை நன்கு பயிற்றுவிக்கும்படி தொண்டர் படைத்தலைவர் D. சாமுவேல்வானதிரையரவர்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

நா. ப. காளியப்பன், நாகை.


ஸ்ரீவில்லிபுத்தூர்
# பி. பி. அன்ஸன்
பிஸ்கட் பாக்டரி.
குழந்தைகளுக்குத்தகுந்தஆகாரம்
அரரூட் பிஸ்கட்.
சிற்றுண்டிக்கு முதன்மை பெற்றது.
சூஷ்பரி பிஸ்கட்.
புஷ்டியைக் கொடுக்கக் கூடியது.
பழம் கேக்.
எல்லா முக்கிய இடங்களிலும் கிடைக்கும்
P. P. & SON,
Cake & Biscuit Factory,
SRIVILLIPUTTUR.



## பிரமேகுல சம்ஹாரி.

சகல வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, தந்திமேகம், ரணம், அரையாப்பு, அண்ட வாதம், கைகால் கருப்பு, கிரந்தி, தடிப்புகள், திமிர் முதலியவைகளை ஐந்தே தினத்தில் தீர்க்கிறது. புட்டி 1-க்கு ரூ. 2.

## மதன கோலாகல ரசமணி மாத்திரை.

மறதி, அசதி, சோம்பல், இடுப்புவலி இவைகளை நீக்கி ஞாபக சக்தி, போகசக்தி, வீரியவிர்த்தி முதலியவைகளை யுண்டாக்கும். இரவில் சாப்பிட சிங்க வீர்யம்போல் தாதுபுஷ்டியளிக்கிறது. குளிகை 50 ரூ. 4. 25 ரூ. 2

# ஸ்ரீராமபிரான் வைத்தியசாலை, திருச்செங்கோடு(S. I.)

4-ம் பக்கம் தொடர்ச்சி.

காரியத்திற்காக எழுதின கதை அவர்கட்கே விரோதமாக இருக்கிறது.

மகன் பங்களாவில் பொட்லரைக் கண்டு கும்பிட்டு அவனுக்கு வேண்டிய இதங்களைச் சொல்லி வணங்கி ஒடுங்கி அவன் கொடுக்கும் காபியோ, சோடாவோ, குடித்து அவன் தயவிற்குக் காத்துக்கொண்டிருக்கிறான். அவனுடைய அப்பன் பாதையில் நடப்பவர்களைத் தூரப்போ தூரப்போவென்று விரட்டுகிறான். மகன் வொய். எம். ஸி. ஏ. ஆஸ்டலில் வசிக்கிறான். அவனுடைய அப்பன் இங்கு வர்ணாஸ்ரம தருமம் அவஸ்யமென்கிறான். மகன் மெடிகல் காலேஜில் படிக்கிறான். பிணத்தைத் துண்டு துண்டாக அறுத்த அந்தக் கையால் சாப்பிடுகிறான். அவனுடைய அப்பன் சாப்பிடுவதை யாரும் பார்க்கக் கூடாது. பார்த்தால் திருஷ்டி தோஷம வந்துவிடு மென்கிறான். மகன் ஓட்டலில் எச்சிலை எடுக்கிறான் அவனுடைய அப்பன் தொட்டால் தீட்டுவந்துவிடுமென்கிறான். கள்ளையும், சாராயத்தையும் வயிற்றில் நிறைத்துக் கொண்டு திண்ணையிலுட்கார்ந்திருக்கும் சில பிராமணர்கள் வீதியில் நாடாரை நடக்கக் கூடாதென்கிறார்கள். 144-வது செக்ஷன் பிரகாரம் பப்ளிக் ரோட்டில் நாடார் நடக்கக் கூடாது என்று தடுக்கப்படுகிறார்கள். சீமையில் மாட்டு நாக்கும், பன்றியின் ரவாசம் எனுத கடாரியின் தொடையும், இங்கிலீஷ் சாராயமும் தின்று குடிக்கிறார்கள். மேடையில் சுயராஜ்ஜியமென்கிறார்கள். தன் பிள்ளைக்கும், தன் சுற்றத்தாருக்கும் வேலைவாங்கிக் கொடுக்க வெள்ளைக்காரர்களைத் தாங்குவதிற் குறைவில்லை. கோழிமுட்டை, கோழிக்குஞ்சு, ஆடுமாடு இவைகளின் சூப்பு உயர்ந்த ஜாதி இந்துக்களுக்காகாரமாகி விட்டது. ஏனெனில் பலக்குறைவு, நீரழிவு, க்ஷயம், ஜீரணக்குறைவு, என்னும் வியாதிகளுக்கு மேற்சொன்ன ஆகாரங்கள் வைத்தியர்களால் வற்புறுத்தப்பட்டு நாமங்கிகரித்து வழக்கத்தில் பட்டுக் குற்றத்திலிருந்து நீங்கி விட்டன. நமக்கவசியமானதால் சாஸ்திரம், ஆசாரம், பழக்க மெல்லாம் ஓடிப்போய் விட்டன தாழ்த்தப் பட்டவர்கள் பொதுவான எல்லா இடமும் போகவேண்டிய தவசியமல்லவா? அந்த இடத்தில் ஆசாரமும், சாஸ்திரமுமவர்களைத் தடுப்பது நியாயமாகுமா? நாம் படிக்காமல், சரியாய் நடக்காமல் பார்ப்பானை ஏன் குற்றஞ்சொல்ல வேண்டுமென்று அநேகர் நினைக்கிறார்கள். அதிகாரிவர்க்கத்தை ஒழிக்க என் அதிகாரிகளைக் குற்றஞ்சொல்லுகிறோம். நம் இராஜ்ஜியம் நம் பலக்குறைவினாலோ, புத்தியில்லாமலோ, அவர்கள் பலத்தாலோ, அறிவாலோ, வெள்ளைக்காரர்கள் கையில் இருக்கிறது.

நம் இராஜ்யம் நமக்கு வந்தால் நாம் க்ஷேமமடைவோம். இராஜா ஒருவரை நீக்கி; மற்ற எல்லா அதிகாரிகளும் ஒரு தலைபக்ஷமாய்த் தன் இனத்தவர்களே உயர்ந்தவரென்றும், அவர்களுக்கே எல்லா சௌகரியங்களும் செய்து கொடுக்கிறார்களென்னும் இதைப் போக்கடிக்கவே காங்கிரஸ் வந்திருக்கிறதென்றும், ஒத்துக்கொள்ளுகிறோம். அதைப்போல வேதமும் அதன் ரிஷிகளும் நீங்கலாக மற்ற எல்லா வைதிகங்களும், ஒரு தலைபட்சமானதும் தங்களினத்தார்க்கே நன்மை செய்து மற்றவர்களைக் கெடுத்துத் தாழ்த்தி விடுகிறதென்று சொல்ல வந்திருப்பதுதான் “குடி அரசு.” நாமெல்லாமதற்கு நன்றி செலுத்த வேண்டும். நம் அறியாமையையும், ஆலோசனையின் குறைவையும் உணரவேண்டும். ராஜ தந்திர ஞானத்தால் வசப்படுத்தி ஆயுதத்தால் பயப்படச் செய்து 150 வருஷங்களாக ஆளும் இங்கிலீஷ் கவர்மெண்டே! உங்கள் ராஜதந்திரத்தை எங்களுக்குச் சொல்லிக் கொடுக்கவில்லையே! எங்களில் 100-க்கு 5-பேர் கூடப்படிக்க ஏற்பாடு செய்ய வில்லையே என்று அவர்களிடம் தர்க்கம் பண்ணுகிறோம். நரக சொர்க்கத்தின் அமைப்பால் வசப்படுத்திக் கடவுளின் பெயரால் பயப்படுத்தி அநேகமாயிர வருஷமாய்க் குருவாய் இருந்து வரும் கூட்டத்தாரே! உங்கள் மதஞானத்தை எங்களுக்குப் பரப்பவில்லையே லட்சத்தில் ஒருவனுக்குக் கூட மதம் தெரியாதே. அன்னியமதஸ்தர்கள் எங்களைப் பரிகசிக்கும் ஆபாசமான மத வழக்கங்கள் எங்களை விட்டுத் தொலைய ஏற்பாடு செய்யுங்கள்; வீதியில் நடக்கவும் பொதுப்பள்ளிக்கூடத்தில் சேரவும் நம்மதம் உத்தரவு கொடுக்க மாட்டேனென்கிறதே, என்பதுதான் பார்ப்பனரிடம் பேசும் தர்க்கம். இதை அடிப்படையாகக்கொண்டே பிராமணர்பிராமணரல்லாதவர் என்ற கட்சி உண்டாயிற்று. ஸ்தல ஸ்தாபனங்களில் அதிகாரங்கொடுத்து நாம் சரியாய் பழகிவிட்டால் இனியும் அதிகாரம் கொடுப்பதாக அதிகார வர்க்கத்தார் சொல்லுகின்றனர். நம் வேதத்திலிருந்து வீதியில் போகக்கூட ஓர் சிற்றிருத்தம் கொடுக்கக் கூடாதா? அதிகாரவர்க்கத்தை விட்டு இராஜாங்கத்தை எப்படிப் பேச முடியும்? மத விஷயத்தில் பார்ப்பானை விட்டுப் பேசுவதெப்படி? நல்லது வர வேண்டுமானால் குற்றம் தீரவேண்டுமே பார்ப்பானைக் குற்றஞ் சொல்லுவது வேண்டுமென்றா? விரதமா? ஒன்றுமேயில்லை. தன் குற்றம் தெரிந்தவன் ஞானி. ஞானமென்பது பிராமணனின் பூர்வீக சொத்து. அதைத் தெரிந்து அவர்கள் மேன்மையடைந்து மற்றவர்களை மதத்தின் பெயரால் அழுத்துவது மகாபாபம். இப்படியிருந்தால் நம் இராஜ்யம் எப்பொழுதும் முன்னுக்கு வராது. நாம் ஜாக்கிரதையாக இருந்து விடலாமென்று பார்ப்பனர் நினைக்கலாம். பார்ப்பான் தன்னைத் தலையாகவே வைத்துக் கொள்ளட்டும். உடம்பிற்கு வந்த புண்ணின் புரை தலைக்குமோடு மென்பதைத் தெரியவேண்டும்.

(தொடரும்.)


# மதனகேசரி

இணையற்ற மகா தாதுபுஷ்டி லேகியம்.

இது அபார சக்தி வாய்ந்தது! தேகம் வலுக்கும். மூளை, இருதயம், குண்டிக்காய்களுக்கு வலுவேற்றும். நரம்பு ஸ்தானங்களைப் பலப்படுத்தும். அபரிமிதமான தாது விருத்தி, இரத்த விருத்தி, போகசித்தி உண்டாக்கும். தாது புஷ்டிக்கு நிகரற்ற மகா உயர்ந்த சாலாமிசிரி சஞ்சீவி இதுவே.

1 டின் ரூ. 3. வி. பி. அனுப்.

பிராஜானுகூல ஔஷதாலயம் ஸ்ரீரங்கம்.


## பிராமணரை உயர்த்தல்.

(பே. கருப்பன் எழுதியது.)

உயர்ந்த வகுப்பார் என்று இயம்பிக் கொள்ளும் பிராமணர் பல விஷயங்களில் உண்மையாகத் தாழ்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஒரு சிலர் தவிர அவ்வகுப்பினரில் பெரும்பான்மையானவர் பரம ஏழைகளாகப் பெரிதுந் துன்புறுகின்றனர். இப்பெருந்துன்பத்தைப் பொறுக்க முடியாததினாலேயே; பலர் வைதிக வேடம் பூண்டு கொண்டு யாசகம் வாங்கப் புறப்பட்டு விடுகின்றனர். இவ்வேடதாரிகள் யாசகம் வாங்கச் செல்லும் இடங்களில் தமது புரட்டுச் சுவடிகளை அவிழ்த்து மக்கள் உளத்தைப் பெரிதுங் கலக்கி விடுகின்றனர். படிப்பு இருந்தாலும், இல்லாவிட்டாலும், பிராமணப் பிறப்பு எனும் ஓர் உரிமையை மாத்திரம் வைத்துக்கொண்டு மற்ற ஜாதியாருக்கு ஜாதி சமய கிரியைகளைச் செய்துவைக்க வந்து விடுகின்றனர். இவர்கள் வயிற்றுப் பிழைப்பு ஒன்றையே பொருளாகக் கொண்டிருப்போராதலால், கிரியைகளைத் தத்தம் மனம்போனவாறு விரிவாகச் செய்யச் சொல்லிப் பணத்தைக் கொள்ளைகொண்டு செல்கின்றனர். இவ்வாறு பொய் புரட்டுக்களைச் சொல்லிச் செல்வர்களை ஏமாற்றிப் பிழைப்போர் பலர். பலர் சோம்பேறிகளாகச் சத்திரங்களில் சாப்பிட்டுக்கொண்டு, தானம், பூரி முதலியவைகளை வாங்கிக் கொண்டு நாடோடிகளாகத் திரிகின்றனர். இவ்வாறு பிராமணர்களில் பெரும்பான்மையானவர்கள், எத்தொழிலுஞ் செய்யச் சாத்திரம் இடங்கொடுக்க வில்லையென்று வயிற்றுப் பிழைப்புக்கு வழியின்றித் தாமும் பெரிதுந் துன்புறுவதோடு பிறரையும் துன்புறுத்துகின்றனர். குருடன் குருடனுக்கு வழிகாட்டுவதுபோல், முத்திக்கு வழி காட்டுகிறோம் என்று பொது ஜனங்களைப் பெரிதும் ஏமாற்றுகின்றனர். பிராமணர்களினாலே நமது சமயம் சடங்குச் சமயமாகப் போய்விட்டது. தத்துவ சமயமானது மறைந்திருக்கிறது. சடங்குகள் மிக மிக வீணாக விரிந்துவிட்டன. பல சடங்குகள் அர்த்தமின்றியே நடைபெறுகின்றன. நிற்பதற்கும் உட்காருவதற்கும் எழுவதற்கும் எல்லாவற்றிற்கும் சடங்குகள் ஏற்பட்டு விட்டன. தானங்களில் ஓடதானம், எருமைக்கடாத்தானம், தடிக்கம்புத் தானம், என்று நூற்றுக் கணக்கான தானங்கள் செய்யப்பெறுகின்றன. பிள்ளைப்பேறு, உடல் நலம் முதலியவைகளுக்கு பதினாயிரக் கணக்கான ரூபாய்களிற் பரிகாரங்கள் நடைபெறுகின்றன. பிராமணர்கள் இவ்வாறு பணத்தைப் பறித்துக்கொண்டு, இலேசாகப் பிறர் பாவத்தைக் கழுவி விடுவதாக நடிக்கின்றனர். சடங்கு காலங்களில் செல்வர் வீடுகளில் பிராமணர்கள் கூட்டங் கூட்டமாக மொய்த்துக் கொண்டு கூச்சலிடுவதைப் போல் அநாகரிகம் வேறொன்றுமில்லை. இவ்வநியாயங்களைச் சேதிக்க வேண்டுமானால் பிராமண சமூகத்திற்குத் தொழில்களைக் கொடுத்து உயர்த்தினாலொழிய முடியாது. தற்காலத்தில் பிராமண சமூகத்தில் ஆங்காங்கு தொழில்புரிந்து சிலர் செல்வர்களாகவும், கௌரவ வாழ்க்கையுடையோராக

வும் விளங்குகிறார்கள். இவர்களைப் போல் எல்லோரும் ஒவ்வொரு தொழிலை மேற்கொள்ளுவார்களானால் சமூகமானது தாழ்ந்த நிலையிலிருந்து உயருதல்கூடும். வைதீகத் தொழில் செய்வதற்கு ஒரு பெரிய சமூகம் தேவையில்லை. சில அறிஞர்கள் இருந்தாற்போதும். "தொழில் செய்து பிழைப்பது அகௌரவம், இரந்துண்பதே மேல்" என்ற எண்ணத்தை இனிமேல் பிராமணர்கள் கைவிட்டு விடுதல் வேண்டும். பிராமண சமூகத்திற் பிறந்திருக்கும் இளைஞர்கள் தானம் சபிண்டி வாங்குவதை விடுத்து, வியாபாரம், கைத்தொழில், முதலியவைகளில் ஈடுபடுவார்களாக. பிராமணாபிமானமுடையவர்கள் ஆங்காங்கு தொழிற்சாலைகள் வைத்து பிராமணர்களை ஈடேற்றுவார்களாக. தற்காலம் தேசத்திற்குச் செய்ய வேண்டிய முக்கியமான காரியங்களில் பிராமணர்களை உயர்த்த வேண்டுவதும் ஒரு முக்கியமான வேலையாகும் அன்னோரை உயர்த்தி அவர்களுடைய மூடக் கொள்கைகளைத் திருத்தாவிட்டால் காலக் கிரமத்தில் நமது சமயமும் மக்களும் பெரிதும் கெட்டுப் போய் விடுவார்கள். எடுத்ததற் கெல்லாம் சடங்குகள் என்றால் இறைவன்பால் மக்கள் வைத்துள்ள மதிப்பும் போய்விடும். இறைவன் பெயரைச் சொல்லி ஏமாற்றவிடுதலும் பெரிதும் பாவமாகும். ஒன்றுந் தெரியாத பொது ஜனங்கள், இறைவன் பெயரைச் சொன்னால் எல்லாவற்றையும் கொடுத்துவிடுகிறார்கள். பின்னர் பணமுடையால் பெரிதுங் கஷ்டப்படுகின்றார்கள். சடங்குகளுக்குச் செலவு செய்ய முடியாது துன்பப்படுவோர் பலர் இருக்கிறார்கள். ஆனால் அச்சடங்குகள் அநாவசியம் என்பது அவர்களுக்குத் தெரியாது. எனவே, பிராமணர்கள், "இறைவன் கட்டளை பெரியார் எழுதிவைத்தது." என்று பொய் புரட்டுகளைச் சொல்லிப் பணத்தைக் கொள்ளை யடிக்கின்றனர். பிராமணர்கள் தொழில் புரிய முற்படுதல் வேண்டும். செல்வர்கள் சடங்குகளைச் சுருக்கித் தொழிலைக் கொடுத்துப் பிராமணர்களை உயர்த்துதல் வேண்டும்.

தங்க மெடல்களும், அநேக நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்ற
ராஜவைத்ய ஆஸ்ரமம்.
சரஸ்வதி விலாசம் பிரஸுக்கு எதிரில்
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.
மேகரணங்கள், வெள்ளைவியாதி, ராஜபிளவை, கட்டிகள்,
நீடித்த மூல பவுத்திர வியாதிகளை ஆபரேஷன் இல்லாமல்
சௌக்கியம் செய்யப்படும். விபரத்திற்கு எழுதுங்கள்
ஆயிரக்கணக்கான
மூல பவுத்ர வியாதியஸ்தர்கள்.
சௌக்கியமடைந்திருக்கிறார்கள்.

# பிராமணீயத்தை ஒழித்தவர்கள்.

(சென்ற வாரத் தொடர்ச்சி.)

ஸ்ரீமான்கள்

சி. வி. துரைசாமி,
2|14 பெருமாள் முதலி தெரு.
கொண்டி தோப்பு, சென்னை.

ஆர். ஏ. மணவாள நாயுடு,
வெள்ளி வேலை, கொல்லம்பட்டரை தெரு,
ஸ்ரீரங்கம்.

திரு. கண்ணுசாமி
மு. சா. மு. மு. வேலாதேவி, மிராசுதார்,
அரிசி யந்திரசாலை உதவி அதிபர்.
அவட்வுன், பர்மா.

சு. கதி. கதிரேசன் செட்டியார்,
ராயவரம்.

கோ. பக்கிரிசாமி நாயுடு,
ராயவரம்.

பி. எஸ். வெள்ளையப்ப பிள்ளை,
பெரிய கடை வீதி, மேலா முரி, பாலக்காடு.

கே. சுந்தர ராஜுலு,
C/o ஆர். எஸ். கே. கம்பெனி,
முத்தியால்பேட்டை, புதுச்சேரி,

கும்பகோணம்:

கா. மு. நீலமேகம் பிள்ளை,
பெரிய கடைத் தெரு.

கோ. ஷண்முகம் பிள்ளை,
அழகப்ப முதலி தெரு.

வே. பக்கிரி பிள்ளை
பஞ்சுக்காரத் தெரு.

அ. பக்கிரி செட்டியார், ,,
ப. துரைசாமி பிள்ளை, ,,
கு. சுப்பையா நாயுடு, ,,
மீ. மாரியப்ப பிள்ளை, ,,

வ. சௌந்தர ராஜ பிள்ளை,
அழகப்ப முதலி தெரு,

பொ. முத்துலிங்கம் பிள்ளை,
வெள்ளையப்ப தெரு.

சா. நடேச பிள்ளை,
காஜியார் தெரு.

போ. சடையப் பிள்ளை,
அழகப் முதலி தெரு.

நி. சா. கோவிந்தசாமி பிள்ளை,
மிராசுதார், வியாபாரம்,
அழகப்ப முதலி தெரு.

கே. எஸ். சுப்பிரமணிய பிள்ளை,
காங்கிரஸ் காரியதரிசி.

மா. தா. வீரப்பச் செட்டியார்,
போ. கோவிந்த பிள்ளை,
இரும்புக்கடை.

ஆ. பக்கிரியா பிள்ளை,
புகையிலை மண்டி மிராசுதார்,

டாக்டர் எஸ். முத்துக்குமாரசாமி பிள்ளை,
பி. ஏ. எம். எஸ்., பி. எஸ்.

ஆர். வெங்கடராம நாயுடு,
தாலூகா போர்டு உதவி தலைவர்.

ஏ. குப்புசாமி பிள்ளை,
கௌரவ மாஜிஸ்டிரேட்.

சோழபாண்டி:

அ. ரெ. மா. மனியப்ப மல்லிக் கொண்டார்,
மிராசுதார்.

வேலுக் கண்டியார், மிராசுதார்.

ராஜகோபால கண்டியார், மிராசுதார்,
காந்தி வாசகசாலை, காரியதரிசி.

கா. ரெ. கணபதி,
16, ஒற்றைத் தெரு, மன்னார்குடி.

உ. ராம. சி. உத்திராபதி தேவர்,
மிராசுதார்,
உள்ளிக்கோட்டை.

சதாசிவ மழவராயர்,
மிராசுதார், குறிச்சி.

வெ. மாணிக்க முதலியார்,
ஆம்பூர்

ப. சௌந்திரபாண்டியன்,
49, நாயக்கர் புதுத்தெரு, மதுரை.

ஜி. மாணிக்கம் பிள்ளை,
மேலமாசி வீதி, மதுரை.

க. சுப்பிரமணியம்,
216, நாயக்கர் புதுத்தெரு, மதுரை.

க. குருசாமி,
பரமேஸ்வரம்பிள்ளை சந்து,
வடக்குமாசி வீதி, மதுரை.

திருநாகசுந்தரம்,
பேச்சியம்மன் கோவில் தெரு,
மதுரை.

எம். ராமசாமி,
47, நாயக்கர் புதுத்தெரு, மதுரை.

வ. திருமலையப்பன்,
216, வடக்குமாரட்டு தெரு,
மதுரை.

வ. அழகப்பன்,
கூத்தியார்குண்டு கிராமம்
தற்சமயம் மதுரை

எஸ். கூடலிங்கம் பிள்ளை,
புத்தக வியாபாரம், மதுரை.

ம. அழகர்சாமி பிள்ளை,
புக்ஷாப், மதுரை.

எம். டி. சுப்பிரமணிய முதலியார்,
மதுரை.

இருளப்பக்கோனார்,
கருக்குவாலம்மன் கோவில்
இராமாயணச்சாவடி தெரு, மதுரை.

எம். நாராயணசாமி பிள்ளை,
மஹாதானத் தெரு, மாயவரம்.

ஜி. முருகேசம் பிள்ளை,
155, மஹாதானத் தெரு,
மாயவரம்.

பருத்தித்துறை யாழ்ப்பாணம்

க. க. முருகேச பிள்ளை. (ஆசிரியர்)
ஆ. க. இராமலிங்கம் பிள்ளை.
க. முருகேச பிள்ளை.
க. குமரையா பிள்ளை.
க. தம்பையா பிள்ளை. (ஆசிரியர்.)
மு. க. முருகேச பிள்ளை (ஆசிரியர்.)
வீ. கணபதிப் பிள்ளை (சோதிடர்.)
சே. பரமநாதன்.
சே. செல்லையா பிள்ளை
வே. குலசேகரம் பிள்ளை.
கா. தம்பியையா
க. வல்லிபுரம் பிள்ளை
சே. பொன்னையா பிள்ளை
சி. வேலுப் பிள்ளை
தா. கணபதிப் பிள்ளை
தி. இராசசேகரம் பிள்ளை
ஆ. ஆறுமுக பிள்ளை
கோ. முருகேச பிள்ளை
த. வேலுப் பிள்ளை
த. சின்னத்தம்பி பிள்ளை
வ. ஆறுமுகம் பிள்ளை
க. பரமானந்தன்
இ. அந்தோனிப் பிள்ளை.

## இந்தியர் கஷ்ட நிவாரண பாங்கு "லிமிடெட்" கோயமுத்தூர்

காப்பு திரவியம்—ரூ. 2,706.
மூல திரவியம் — ரூ. 5,00,000.
வெளிவிடப்பட்டது —ரூ. 69,100.
வசூலிக்கப்பட்டது —ரூ. 43,890.
டிபாசிட்டுகள் ரூ. 62,580-1-0.

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி வீதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ் பிக்செட் டிபாசிட்டு
இரண்டு வருஷ, கெடுவு வட்டி
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—10—0
வருஷம் 1-க்கு வட்டி ரூ. 7—8—0
இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்செட் டிபாசிட்டு.
ஒரு வருஷ கெடுவு, வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—9—0
வருஷம் 1-க்கு வட்டி ரூ. 6—12—0
இதற்கு வட்டி 6-மாதங்களுக்கொருமுறையாவதும் வருஷத்திற் கொருமுறையாவதுப் கொடுக்கப்படும்.

ஷை பாங்கானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருஷ காலமாக ஒழுங்காக நடந்து வருகிறது. நாளது 10-2-16-ல் வருஷாந்திரக் கூட்டமும் நடைபெற்றது. இப்பாங்கானது கோயமுத்தூரில் உள்ள இம்பீரியல் பாங்கை தவிர்த்து மற்ற பாங்குகளைப்போல் 100-க்கு நாள் 1-க்கு ஒரு அணவும், அதற்கும் அதிகமாகவும்; அதிகவட்டி வாங்காமலும், புதிய விதிகளுடனும் குறைந்த வட்டிக்கு (அதாவது 100-க்கு, 0—12—0. 1—0—0) ரூபாயிக்கு எவ்வகையிலும் அதிகப்படாமல் ஏழை ஜனங்களுக்கு அநேக சௌகர்யமாகவும் இருப்பதோடு, குறைந்த பங்குகளிலேயும் மானேஜிங் டைரெக்டர், அவர்களுடைய திறமையினாலும் முயற்ச்சியினாலும், பங்குக்காரர்களுக்கு முதல் வயதிலேயே 100-க்கு ஒரு ரூபாய் வட்டி கொடுக்கப் பட்டிருப்பதும் தவிர ரிசர்வு பண்டு ரூபாய் 2,706 சேர்ந்திருக்கிறது. நாளது வரை யாதொரு போக்குருத்தி யில்லாமலும் இருப்பதி லிருந்து மானேஜிங் டைரக்டருடைய தீர்க்காலோசனையும், பாங்கின் நல்ல ஸ்திதியையும் காட்டுகிறது. மேலும் அதிகமான பங்குகள் சேர்ந்து ஏராளமான லேவாதேவி நடந்தால் இப்போது கிடைத்த இலாபத்தைவிட அதிக இலாபம் கிடைக்குமென்றும், ஏழைகளுக்கும் பெரிய உபகாரமாக இருப்பதற்கும் கடவுள் கிருபை செய்வாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

குறிப்பு:—

இந்த பாங்குக்கு ஏற்பட்டிருக்கும் டைரக்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி சொந்த பாங்கு நடத்தக்கூடிய சக்தி வாய்ந்த பெரிய பெரிய தனவந்தர்களாகவும், அமையப் பெற்றிருப்பதால் யாவரும் தங்களிடமுள்ள திரவியத்தை டிபாஸிட்டாகவும் பங்குத் தொகைக்காகவும் இப்பாங்குக்கு அனுப்பி உங்களுடைய பணத்திற்கு யாதொரு நஷ்டமின்றி வட்டியுடன் பெற்றுக்கொள்வதோடு, உங்களுடைய திரவிய சகாயத்தினாலும், ஏழைகளுக்கும் சகாயம் செய்த பாக்கியமும் அடைவீர்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை.

ஜி. ராமச்சந்திர செட்டி,
31—5—26. மானேஜிங் டைரக்டர்.

ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.
உலகப் பிரசித்திபெற்ற

## மஹா சந்தனாதி தைலம்.

இந்த தைலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தைலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்து வந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக்குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தைலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்து கொண்டேயிருக்கின்றன. இத்தைலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவுன்ஸ். பாட்டல் ரூ. 4-0-0. 12 அவுன்ஸ். பாட்டல் ரூ. 2-2-0. வி. பி. செலவு வேறு.

## சாலாமிசிரி லேகியம். சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவுள்ள ஆண்தன்மையை விருத்திபடுத்துவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரித ஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக் கொடுத்து, தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0 வி. பி. தபால் செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண்ட் கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு திருச்சி

# AWARDED

## GOLD MEDALS & CERTIFICATES OF MERIT




**FLOWS FREELY AND NEVER FADES**

**This is the ink, to keep your records fresh after years.**

**ALAYAM'S INK FACTERY**
**COIMBATORE. S. INDIA.**

## மின்சார ரசம்.

### எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது

**மின்சார ரசத்தின் குணம் எப்படி?**

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது

**மின்சார ரசத்தின் விசேஷமென்ன?**

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமுமில்லை. எவ்வித பத்தியமுமில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும் பயமின்றி உபயோகிக்கலாம்.

**மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?**

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

ஒரு புட்டியின் விலை ரூ 2. தபால் செலவு வேறு.

**மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம் (S. I.)**

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.



வித்வத்வம்! அனுபவம்! ஆச்சரியம்! விநோதம்! ஆநந்தம்! விசித்திரம்! அற்புதம்!
இவைகளெல்லாம் அடைவது எப்படி?

எமது **"ஆனந்த குண போதினி"**

ஆனந்த குண போதினி அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான உயர்ந்த நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்:—எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு.

வருஷ சந்தா:—இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு ரூ. 1—0—0
மாதிரிப் பிரதி இனம். வெளி நாடுகளுக்கு ரூ. 1—4—0

சித்திரை மாதத்திலிருந்து வெளிவந் துலவுகிறது.

டி. இராஜகோபால் முதலியார்,
ஆனந்த குண போதினி ஆபீஸ், 302 தங்கசாலை வீதி, சென்னை.



ஆங்கிலேயம் படிக்க விரும்பும் கனவான்களே ஏன் கவலைப்படுகிறீர்கள்.
25000 ஜனங்களால் வாசித்து பிரபல்யமடைந்த

**ஆங்கில ஆசான் அல்லது போதினி**




தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

இது 7-ம் பதிப்பு 700 பக்கம் கொண்ட ஓர் பெரிய புத்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும், மிகவும் முக்கியமானது.

முழு காலிகோ பயிண்டு புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0.
தபால் செலவு ரூ. 0—6—0.

பினங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினால் புஸ்தகம் ரிஜிஸ்டர் செய்து அனுப்பப்படும்.

தி. இராஜகோபால் முதலியார், நெ. 302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.



பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

**மஹா சந்தனாதித் தைலம்**

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!
வெயில் காலத்திற்கு மிகப்பயனுள்ளது!!

இம் மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் 2-4-0. 6-அவுன்ஸ் 1-3-0

தமிழ் மருத்துவ சாலை,
220 தங்கசாலைத் தெரு, சென்னை



இனம் இனம்!!

**ரகஸ்ய ரத்னம்**

அல்லது

வாழ்க்கை நலம் புகட்டும் நூல்.

வைத்திய அனுபவங்கள், வாழ்வின் மர்மங்கள், இரகசியக் குறிப்புக்கள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை விவரங்கள் இல்லற சார சங்கிரகம் ஆகிய பலவும் அடங்கியது.

விலை இல்லை; தபாற் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபாற் பெட்டி 222, மதராஸ்


கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. இராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.